உ

கணபதிதுணை.

# அகத்தியமுனிவர்

அருளிச்செய்த

# பரிபாஷைத்திரட்டு.

இஃது,

தஞ்சாவூர்

சாமிசெட்டியாரவர்களால்

பலபிரதிகளைக்கொண்டாராய்ந்து

கையெழுத்தாலுள்ளவாகிய

வழுக்களைந்து

மேற்படியார்சகோதரராகிய

சி-கன்னையசெட்டியாரால்

சிந்தாத்திரிப்பேட்டை

சு. முனிசாமிமுதலியாரவர்கள்

மெய்ஞ்ஞானசூரியோதயவிலாச

அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

ஸ்ரீஅங்கிரஸ ஜூலைமீ

# பரிபாஷைத்திரட்டின் பொருளடக்க அகராதி.


| பொருள். | பக்கம். |
|---|---|
| அட்சரயவிதம் ... ... | ௯௧ |
| அண்டச்சுன்னம் ... ... | ௨௭ |
| அண்டரண்டநவகண்டம் | ௯௨ |
| அநாகதம்... ... ... | ௫௫ |
| ஆக்கினை... ... ... ... | ௫௭ |
| ஆதாரதீட்சை ... ... | ௭௯ |
| இற்நூலிற்சொல்லியவிரம் | ௰௯ |
| இந்நூல்சித்தி... ... ... | ௬௧ |
| இரண்டாங்காண்டம் | ௰௭ |
| இரசக்குளிகை ... ... | ௪௫ |
| இரசக்கட்டு ... ... | ௫௨ |
| இவர்களுக்குவாதருடியாதெனல் ... | ௮ |
| உலகவாதிகளின்குணம் ... | ௯௧ |
| ஐந்தாங்காண்டம். | ௯௪ |
| ஐம்மூலம்-ஐங்காயம் ... | ௪௧ |
| ஐங்காயம் ... ... ... | ௫௨ |
| கங்கைச்சமாதிதீட்சை... | ௯௮ |
| கணபதிபூசை... ... ... | ௬௪ |
| கம்பியுப்பு-பாறையுப்பு ... | ௭௮ |
| கருத்தயிலம் ... ... | ௪௯ |
| கல்லுப்பறிதல்... ... | ௨௨ |
| கல்லுப்பு ... ... ... | ௫௰ |
| கற்பக்கரு... ... ... | ௭௨ |
| காயாதிகற்பம் ... ... | ௪௪ |
| காயாதிசுன்னம்... ... | ௪௯ |
| கிரியை... ... ... ... | ௰௨ |
| கிளிஞ்சிற்சுன்னம் ... | ௨௯ |
| கீழ்மூலசுத்தி... ... ... | ௪௫ |
| குருமூடிக்கும்வகை ... | ௬௰ |
| குருவண்டு-விடக்கல்லு ... | ௫௮ |
| குருநூலைம்பது-மதிவெண்பா - நந்தீசர்நிகண்டு | ௭௰ |
| கேசரக்குளிகை ... ... | ௭௧ |
| கைபாகசெய்பாகங்கள் ... | ௯௯ |
| கொல்லிமேவர் ... ... | ௭௩ |
| சதகோடிகுளிகைசித்தர்தர்க்கம் ... | ௯௨ |
| சதாசிவபூசை ... ... | ௬௯ |
| சத்திதீட்சைவிவரம்... ... | ௰௨ |
| சத்தியுப்பு-சிவவுப்பு ... | ௯௩ |
| சரக்குகளின்பெயர்... ... | ௭ |
| சரியை-ஞானம்... .. | ௰௨ |
| சல்லிமேவர் ... ... ... | ௫௭ |
| சல்லிமேவர் .. ... ... | ௭௩ |
| சவுக்காரம் ... ... ... | ௨௯ |
| சாதிவெடியுப்பின்பிறப்பு | ௰௩ |
| சாதி-தேயம்... ... ... | ௯௬ |
| சாபம் ... ... ... | ௬௮ |
| சாபநிவிர்த்தி ... ... | ௬௮ |
| சாபநீக்கல் ... ... ... | ௯௮ |
| சித்தர்கள்தர்க்கம்... ... | ௯௯ |
| சிவச்சுன்னம்... ... ... | ௬௰ |
| சுத்தகங்கை ... ... ... | ௯ |
| சுத்தசலம்... ... ... | ௫௯ |
| சுப்பிரமணியதியானம் ... | ௪௰ |
| சுவாதிட்டானம் ... .. | ௫௯ |
| சூரியமண்டலம்-சந்திரமண்டலம் | ௫௩ |
| திகைப்பூடு ... ... ... | ௫௨ |
| தீட்சைநீரின்பெயர்... ... | ௮ |
| துலாராசி ... ... ... | ௭௬ |
| தேசிநீர்-ஊசிநீர் ... ... | ௫௧ |
| தேசிநீர்... ... ... ... | ௭௮ |
| தேயவளப்பம்... ... | ௯௬ |
| நவசித்தர்வாக்கு ... ... | ௫௮ |
| நாதவிந்து-அண்டபிண்டம் | ௬௬ |
| நாதவிந்து-அண்டபிண்டம் | ௪௯ |
| நாலாங்காண்டம். | ௪௮ |
| நிராதாரதீட்சை ... ... | ௭௫ |

## பரிபாஷைத்திரட்டின் பொருளடக்க அகராதி.


| பொருள். | பக்கம். | பொருள். | பக்கம். |
|---|---|---|---|
| நிர்க்குணதீட்சை ... ... | ௭௫ | பூரணதீட்சை ... ... | ௭௫ |
| நிலவுப்பு ... ... ... | ௰௧ | மச்சமோசைமுதலியன் ... | ௭௩ |
| நின்மலதெரிசனம்... ... | ௯௧ | மணிபூரகம் ... ... | ௫௪ |
| நின்மலதீட்சை... ... | ௭௫ | மயேச்சுரபூசை... ... | ௩௫ |
| நூல்... ... ... ... | ௧ | மருந்தின்பெயர் ... | ௬ |
| நூற்கோவை ... ... | ௫ | மவுனபூசை ... | ௪௰ |
| நூற்றொகை... ... ... | ௩௧ | முதற்காண்டம் | ௧ |
| பஞ்சசுன்னவிவரம் ... | ௰௨ | மும்மண்டலம் ... | ௫௧ |
| பஞ்சபட்சி... ... ... | ௫௯ | மூன்றாங்காண்டம் | ௩௩ |
| பஞ்சாட்சரம்... ... ... | ௰௯ | மேன்மூலசுத்தி ... | ௪௪ |
| பஞ்சீகரணதீட்சை ... | ௩௩ | மோக்ஷமடைய ... ... | ௰ |
| பதினெண்பேர் ... ... | ௫௮ | யோகம் ... ... | ௰௧ |
| பத்தியம்... ... ... | ௪௪ | யோகநித்திரை ... | ௪௩ |
| பந்தர்ஓமகுண்டம்... ... | ௯௮ | ரவியுப்பு ... ... | ௨௰ |
| பரங்கிசவுக்காரம் ... | ௨௪ | ருத்ரபூசை ... | ௩௫ |
| பரபூசைமுதலியன ... | ௭௭ | வயிரவபூசை ... ... | ௪௰ |
| பராபரதீட்சை ... ... | ௭௫ | வல்லாரைக்கற்பம் ... | ௪௧ |
| பாயிரம்... ... ... | ௧ | வழலை ... ... | ௰௮ |
| பாறையுப்பு ... ... | ௨௰ | வழலைச்சுன்னம் ... | ௨௭ |
| பிரமவுப்பின்பெயர் ... | ௫ | வாதம் ... | ௰௧ |
| பிரமன்பூசை... ... ... | ௩௯ | வாலைபூசை ... | ௪௨ |
| பிரமகற்பம் ... ... | ௯௧ | விசுத்தி ... ... | ௫௬ |
| புத்திகெட்டவாதி ... | ௭௪ | விடக்கல் ... ... | ௭௧ |
| பூசை ... ... ... ... | ௪௰ | விஷ்ணுபூசை ... | ௩௫ |
| பூசைக்குறிப்பு... ... | ௯௨ | வெடியுப்புத்திராவகம்...... | ௨௧ |
| பூதவங்கிசவிவரம்... ... | ௪ | வெடியுப்புத்தீட்சை ... | ௨௫ |
| பூநீர்த்தீட்சை... ... ... | ௨௫ | வெண்சாரைக்கற்பம் ... | ௪௪ |
| பூமிநாதபிண்டம் ... | ௯௯ | வெண்சாரையுப்பு ... | ௭௭ |
| பூரணஏகாட்சரம்... ... | ௯௰ | | |
| பூரணவழலை ... ... | ௯௫ | | |


# பரிபாஷைத்திரட்டு

பொருளடக்க அகராதி

முற்றிற்று.

கணபதிதுணை.

# அகத்தியமுனிவர்

அருளிச்செய்த

# பரிபாஷைத்திரட்டு.

## முதற்காண்டம்.

### காப்பு.

பரமஞ்ஞானோதயத்துப் பரஞ்சுடருலகுக்கெல்லாம்....✻
திரமதாவுதித்தஞான திவாகரன்றிருத்தாள்காப்பு... ...✻
வரமதாம்வகாரயோக மறைப்புநூற்பாடையெல்லாம்.✻
முருகவிழ்ந்தமிழாற்செய்யமுருகனைங்காரர்தாள்காப்பே.✻

### பாயிரம்.

காப்பெனவுரைத்தவாதக் கணக்கொருலட்சந்தன்னைக்... ........✻
சேர்த்ததுபாதியாகத் திரட்டியே நூலையெல்லாம்...... ...........✻
நாற்பத்துமூன்றுமொன்று நடத்தியகாண்டந்தன்னைப்...........✻
பார்த்திடிலைந்நூறாகப் பாடைநூல்படித்திட்டானே...... ......(௧)

படிக்குமிந்நூலுக்கொப்பாம் பராபரமொன்றேயல்லால் .......✻
மடத்தினிலுள்ளசித்தர் வாதநூலிதற்கொவ்வாது....... ...... ...✻
குடத்தினிற்றீபம்போலுங் கூறுநற்சித்தர்பாடை...................✻
திடத்தபொன்மேருவுச்சித் தீபமாமிந்நூலன்றே...............(௨)

இந்தநூலைந்துகாண்டத் தியம்பியகருவேதென்றால்... ...... ......✻
சந்தேகந்தீர்க்கவேண்டித் தமிழ்க்கவியைந்நூற்றுக்குள்...........✻
மந்திரவாதயோக மணிபஞ்சீகரணமார்க்கம்......................✻
சிந்தைசெய்வகாரபாடை தீட்சையுஞ்செப்புமாதோ..........(௩)

### நூல் - வேறு.

செப்பியதோர் வகையென்ன நூலின்மேலாந் - தீட்சையொ ரேகைபாகஞ் சேர்மானங்கள், தப்பிலாக்குருமுடிக்குங் கருமானங்கள் - தத்துவபஞ்சீகரணந் தாக்கரோக்கும், ஒப்புவமையில்லாத மு

வுனக்கூறே - மேறதியுள்ள வட்டாங்கமேயாகக்கூறு, மெய்ப்புகைய காயகற்பசமாதிக்கூறு - வெறிமேறியோடுமெணிமேவதைக்கூறே...(௪)

கூறுனகாலங்க ளிடைபாகங்கள் - குருசீடபக்குவங்கள் பிரமாணங்கள், பேறுனசித்தியிலே யிருபத்தைஞ்சும் - பிரபலமா நூன்மறைவுச் சந்தேகங்கள், நீறுகவெளியிட்டுச் சொன்னவாற்று - ணிகண்டெனவுஞ் சித்தரிதை நினைவுள்வைத்தார், ஆறுறும்று நூறுங்கற்பநூறு - மாயிரமுமுந்நூறு மடக்கஞ்செய்யே... ...................(௫)

அடக்கமுள்ளசூத்திரங்க ளின்னுங்கேளு - வாயிரத்தோடிரு நூறைந் நூற்றின்மேலொன், றடலுக்குளுயிர்முப்பத் தொன்றெண்பத்தொன் - றற்றபதினொன்று நானூற்றொன்று, கோதறுசீர்மதி வெண்பாக் கவிதைநூறு- குருநூலைம்பதுமதுமேவார் கோவையாகக், கிடைப்பதிலைபூர்வதவப் பயனுலெய்துங் - கிடைத்திடினிந் நூல்பதனங்கெதிகொள்வோர்க்கே............................(௬)

கெதியறியாப்பாவிகட்கிந் நூல்கிட்டாது - கிருபையுள்ள ஞானிகட்கே யெய்துமெய்தும், பதியறியநல்மவுன யோகிகட்கே- பரிசுத்தநூலிதுதான் பதணம்பண்ணும், விதியிலையெவ்றெண்ணுதே நூலைத்தேடு - விண்டுவிண்டு பேசாதே வேண்டாம் வேண்டாம், நிதிதருவாருபசார நீக்கிப்போடு - நினைவுகொண்டு சூத்திரத்தி னினைவைப்பாரே...........................................(௭)

நினைவிலே யிருப்பதொன்று சொல்வதொன்று - நெருசிரக்கமில்லாத சித்தர்பாடை, கனவிலேகண்டபொருள் போலவப்பா- காட்டினூர் சூத்திரத்திற் கபடமாக, அனலிலேகிருமிசெல்லா வாறுபோல - வவர்தமொழிக் கெதிர்மொழிசொல் வாருமில்லை, பனியைநம்பியுழுதவந்தன் கதையைப்போலப் - பாடினூர் மறைபொருளாய்ப் பாடினூரே................................................(௮)

பாடுகின்றசித்தர்தம் நூல்களெல்லாம் - பரிபாடை தெரியாதபாவியோர்க்குத், தேடுகின்றபொருளறியச் சொன்னதல்லாற் றினையளவு பொருள்காணச் சொல்லவில்லை, வீடிழந்து மாடிழந்து உள்ளசெம்பொன் - வேணதெல்லாந் தானிழந்து மெய்தோன்றுமல், காடுறைந்துபோவதற்கோ பெரியோர்சொல்வார் - காணுமற் புதைத்தசொல்லைக் கண்டுதேறே........................................(௯)

கண்டுகண்டுதேறினவ ரநேகருண்டு - கருவறிந்து செய்தவர்களநேகருண்டு, தொண்டுசெய்துபெற்றவர்க ளநேகருண்டு - தொல்லையென்றுவிட்டவர்களநேகருண்டு, வீண்டுசொலாதடங்கினவரநேகருண்டு வீண்கரிசுட்டுத்திரிவாரநேகருண்டு, பண்டுவிட்டகுறைகள்வந்து நேர்ந்ததானுற்-பலிக்குமல்லால்வீணருக்கும்பாழதாமே...(௰)

பூரம்நெஞ்சுபெற்றகரு மிகவெல்லாரும் - பாரதனில்ரசவாத மறிவோமென்று, நாளிலொருவர்க்கொருவ ருறவுகூடி - நலமில்லா ச்சூத்திரங்க ளன்றுயப்பேசி, நீள்புவியிலெமையொப்பா ரொருவ ருண்டோ - நீரறிந்த வித்தைவெகு நேர்த்தியென்றந், தாள்பெ றுநற்கும்பகநா மறிவோமென்றுஞ் - சாராயந் தனைக்குடித்துச் சண்ணுவாரோ ........................................ (௰௧)

சண்ணினதேயல்லாமற் சூத்திரத்தின் - சமுசயங்கடாந்தெளி ந்துசார்ந்தோரில்லை, எண்ணி யெண்ணி யவரவர்க டமதுயத்திக்- கேற்றபடிபார்த்தலைந்தி டைவதல்லால், மண்ணிலெழுபிறப்பாகு ம்பிரமகற்பம் - வானைவிட்டுக் கீழிறங்குங்கற் சுண்ணம்பும், விண் ணவர்க்குமருந்தான சாரைப்பாம்பும் - வெளியில்வெளி யானவர்க் கே விள்ளுந்தானே ........................................ (௰௨)

விள்ளுமேயாதியிலே யொளியுமாச்சு - வெந்தழலர்மறுபிற ப்புநீலமாச்சு, கள்ளமதா யிறப்பிறப்புச் சிவப்புமாச்சு - காங்கை கொண்டுமறுபிறப்பு வெள்ளையாச்சு, துள்ளியதுபின்பிறப்பு மஞ் சளாச்சு - தோகைமயினிறமாச்சு மறுபிறப்பில், உள்ளபடிகடைசி யெழு பிறப்பிற்றானு - முயர்கோழிமுட்டைநிறம் படிகமாச்சே.

படிகமென்ற வண்டமெல்லாம் பிரமகற்பம் - பார்க்கவென் றுலாகாசப் பிரமவித்து, குடியிருக்குமிடந்தானே பூமியாகுங்- கொண்டலினு லவதரித்த குருதானையா, அடியறிந்தா லதின்கீழே வானவன்னி - யக்கருவைக்கண்டவனே யருள்மெய்ஞ்ஞானி, திட மாணவெழுபிறப்பாய் நின்றமூர்த்தி - சித்திரையின் வெண்சாரைச் செழுந்தண்ணீரே ........................................ (௰௪)

தண்ணீருஞ் சுண்ணம்புந் தானேசேர்ந்தாற் - சகலசித்துங் கைவசமாய்த் தானேசிக்கும், மண்ணும் விண்ணு மொன்றுமா னால் - வாதமடாவெளியாச்சு மாய்கைபோச்சு, பெண்ணும்பு ருடருமே சேர்ந்தாரானாற் - பிள்ளையொன்றுயொன்போலபிறக்க லாச்சு, கண்ணாரும்பிள்ளைபிதா சூரியன்றான்-கனலிமேலபிறந்தவனை காட்டினேனே ........................................ (௰௫)

காட்டினேன்சிருட்டிசெய்யப் பிரமனென்றுங் - கற்சுண்ணம் பிரமகற்பக் கல்லாமென்றும், மூட்டினேன் மூலவிந் தயனேபூ மி - மூச்சில்லைப்பேச்சில்லை மவுனத்தாயாங், கோட்டிகொள்ளுநான் முகத்தன் வயிற்றுக்குள்ளே - குடியிருந்தானுருத்திரனு மாலுங் கூடி, ஆட்டுகிறவாட்டெல்லாம் பிரமசித்தே - யவன்பிறப்புப் பூத வங்கி சத்தைதக்கேளே ........................................ (௰௬)

## பூதவங்கிசவிபரம்.

அங்கிசத்தில்வந்ததுதான் மண்ணேயாச்சு- தப்பூத மொருமு ளையங் குதிக்கலாச்சு, பங்கிட்டவம்முளையே யிலைபூவாச்சு- பருமலோகாய்பழமாம் விந்துமாச்சு- திங்களெனும்விந்ததுதான் ரசமுமாச்சு- தெளிந்தரசந்தானுமுருண் டுதிரமாச்சு, சங்கையில்லாதுடலாச்சங்குயிருமாச்சு- தன்னுடலிற்சிவசெந்து கோடியாச்சே.(௰எ)

கோடியென்றுலெத்தனையென் றுரைப்பேனையா - கூர்ந்து பார்நாலுவித யோனிக்கூத்தை, ஆடிநின்றமகாபூத வண்டவித்தாலப்பனேபிறந்ததுகாண் பிண்டவித்துத், தேடிநின்றலைவானே னுனக்குள்ளேயே - செலங்குதித்துப் பனிநீர்யோற் செயநீராச்சு, ஓடியவோர்பிறமகற்புக் கற்சுண்ணாம்புக் - குயர்ந்தசிவ தீட்சையிந்தச்செயநீராமே ...... ...................... .............(௰அ)

செயநீருஞ்சுண்ணாம்புஞ் சேர்ந்துகொண்டாற் - சிவசிவாகுருவாச்சு சிவனுமாச்சு, மயமானமுப்பூவென் றுரைத்தசெய்தி- வகைதெரியச்சொல்வதற்கென் வாய்கூசாதோ, தயவாக நானுரைத்தேனிந்தமட்டுஞ் - சமுசயங்கடீரவென்றுற் கடைக்காண்டம்பார், உயிரிருக்கு மிடந்தானே பிரமகற்ப- முடலிருக்குமிடந்தானே பிண்டவித்தே ................................ ..................(௰௯)

வித்துக்குணின்றரச மப்புமாச்சு - விண்ணிழிந்துவந்தரசமுப்புமாச்சு, சத்தித்தவிடந்தனிலே யெல்லாமுண்டு - சாகாதகாருனே சவுக்காரந்தான், புத்திக்குந் தோன்றுதேற் புலத்தியாகேள்- பொருளையிந்தநூன்முடிவுக் கடைக்காண்டம்பார், இத்தைவிட்டுநூல்பாடை யாதிப்புக்க-கெடுத்தபரிபாடையெல்லா மியம்புவேனே()

இயம்புகின்றேன்சித்தர்தம நூலின்பாடை- யிலக்குண்டோ கணக்குண்டோ ரசவாதத்தில், சுயம்பென்றவுப்புக்குச் சித்தக்கூடிச் சொன்னவொரு பாடையெல்லாஞ் சொல்வேன்மைந்தா, பயம்பிடிக்குஞ்சித்தர்கடங் கோபத்தாலே- பழிவருமென் றான்மேலே பாரம்வைத்து, நயம்பெறவே சொல்லிவைத்தே னைந்நூற் றுள்ளே- நாதர்கடாமெனைக்கடிந்து நகைத்திட்டாரே...............(உக)

நகைத்தவர்களாரென்றுற் புலத்தியாகே- ணவநாதர் சித்தர்முதற் பதினெண்பேரும், செகத்திலுறுமால்கனகஞ் சமலைசித்தர்- திருமூலவர்க்குமற்றச்சித்தரெல்லாம், பகைத்தெங்க ளூற்பாடைக் கருவையெல்லாம் - பாரதனிற் கோள்சொல்லப் பண்போவையா, அகத்தியமாமுனியுனக்குத் தெரியாதோதா- னைந்நூறுங் குவைகமற வென்றருளினுனே ... ... ... (உஉ)

## நூற்கோவை.

அருளினவோ ரைந்நூறும்யாருக்கென் று - லகக்கடந்த மெய்
ஞ்ஞானி யருள்பெற்றோர்க்குக், குருமுகமாய்க் கொடுப்பதல்லா
லியற்றோர்கையிற்- கொடுத்தவர்க்கும் பெற்றவர்க்குஞ்சாபங்கூறிப்
பெருமையுள்ளசித்தர்தமை வணங்கிப்போற்றிப்- பிரமன்ற னுத்த
ரவுதன்னாலிந்நூல், கருவறியுஞானிகட்கே வெளியிட்டேனாற்- கைய
டக்கமாகலவைத்துக் கண்டுதேறே .. ... (௨௩)

தேறவேயிந்நூலின் பொருளையாய்ந்து- செப்பினு னுரோம
ருஷியைந்நூற்றென்று, கூறவேனந்திசொன்னமுந்நூற்றொன்று
ருமுறைக்கு மிகத்தெளிவாங் கொடுக்கொணுதால், எறுகின்றகொங்
கணவனெண்ணூற்றுக்கு-ளியம்பினன்மணிமுறைகளெடுத்துச் சொ
ன்னான், பேறுபெற வேண்டுமென்றாற் பிண்ணாக்கன்றன்- பிள்ளை
சொன்ன வெண்ணூறும்பேணிப்பாரே ... ...(௨௪)

பார்க்கின்ற மூலமொண்ணாயிரத்திற்- பாடினாற்கற்பவிதி யிரண்
டானான, மார்க்கமதைச்சட்டைமுனி யோகதிட்சை, மறைப்பில்லை
யென்றுசொல்லிக் கிழித்துப்போட்டான், எற்கவேபூசைவிதிமார்க்
கமெல்லா - மெடுத்துரைத்தான் போகனுமேழாயிரத்தில், தோற்றி
யத்தவகையெல்லாமிந்தநூல்போற் - சொல்லாதுபிரமகெற்பத்தொ
குப்பைக்கேளே ... ... ... ... (௨௫)

## பிரமவுப்பின்பெயர்.

தொகுத்தபடி சொல்லுகிறேன் காரசாரந்- தோன்றுதபாடா
ணமுபரசங்கள், வகுத்தநவலோகங்க ணட்சத்திரங்கள் - மலைபூமி
மூலிகைகள் கருமானங்கள், மிகுத்தசிலவுதகங்களொதற்காலு-மெ
ய்ஞ்ஞானபிரமகற்பம் வேண்டும்வேண்டும், பகுத்தறியபிரமகற்பவு
ப்பின்மார்க்கம்- பரிபாடைப்பேர்வகுத்துப்பாடுவேனே ... (௨௬)

பாடுவேன்பிரமவுப்பின் பேர்யாதென்றாற் - பாங்கானமுதற்
பேர்தான் வழலையென்பார், தேடியேசொல்லுகிறே னிரண்டாநா
மந் - தெளிவானவண்டபிண்டஞ்செப்பலாகும், யேடணையாமுப்
புக்குமூன்றுநாம- மிடைகலைபிங்கலை சுழிமுனையென்றாகும், வாட
வேவேண்டாங்கா லைந்துநாம - மனமொத்துப் புலத்தியனே ம
கிழ்ந்துகேளே ... ... ... ... (௨௭)

மகிழ்வாகமதிபரிதி யெரிவில்லம்பு - வாகானதசநாமம் வகுக்
கக்கேளாய், இகறினாயந்தனித்தியம மிரண்யகற்ப-மிடிவாய்வுகௌ
ரியரிதாரமேகம், புகழ்கோசம்பிசமிவை யீரைந்தென்பார்- புலத்தி
யனேசோடசமா நாமஞ்சொல்வேன், திகழ்வயிரமுரிசுன்னங் கடுக்
காய்நஞ்சு- சிலையுவர்மண்டிரிகுணசல் சலசநஞ்சே ... (௨௮)

நஞ்சானபாடாண மழுரிவிந்து - நாதமுவர் வெள்ளைக்கல்பூமி நாதம், துஞ்சாதசோடசமா நாமமாச்சு, தொகையிருபத்தஞ்சுக்கு விவரங்கேளாய், வெண்சாரைகருநெல்லி லவணப்பூநீர்- வெடியுப்பு நவமூலி மிதுனமேடம், அஞ்சாதவடுமுடியு நபீநீருப்பா- மமாவா சைபிரதமையு மைம்பத்தொன்றே ... ... ... (௨௯)

ஒன்றானவிடயிவண்ணான் கிரகங்கொள்ளி- யுயர்குயவ னரக்கிக ணையதியூணுப்பு, நன்றானவிடக்கம்பி யிருபத்தைஞ்சு - நல்லபஞ்சீ கரணமென்ற நாமமாச்சு, குன்றாதநாமமுப்பத் தாறுஞ்சொல்லக்- கூற்றன்மணற்பொடிமடையன் குடிபோம்வீடு, வென்றானபிடர்ல வணஞ்சாரிபுஷ்டி-வெடியோகையனுமிகதிர்வெளிசுயம்பே... (௫௰)

சுயம்புலிங்கமெழுபிறப்பு விஷ்ணுவைவர் - சுடர்படிகமாசிம லம் பண்ணைச்சூடன், செயம்புகழ்நீரனங்கமலம் பச்சைகாமி- சிங்கி யொடுபுயல்பாம நிலத்திற்பூடு, நயம்பெறுகண் மணிமவுனஞ்சுட் டல்பொட்டல்- நாயகமுமுப்பத்தா று நாமங்கள், வியன்பெறுசொ ல்பாடைதொண்ணூற்றுறின்பேரை-விரித்தெடுத்துப் புலத்தியனே யினிச்சொல்வேனே ... ... ... ... (௫௧)

௯ - மருந்தின் பெயர்.

சொல்லவேதிருமேனி கன்மமந்திரஞ்- சோதிவிருட்சம்படலந் தூலஞ்சூக்மம், வெல்லுமேகாரீயங் கண்மேலுப்பு- மின்னொளிவெ ண்கடர்கொச்சி துருசுசொக்கான், கல்லுமேவாசிபரி சுத்தஞ்சர்ப் பங் - கண்ணாடிபாலைநிலங் கர்ந்தமுத்தான், நல்லவியன் கரும்பூனைக டலிற்பாசி - நந்திபுத்தான்சொரிகறடு நண்டோடாமே... ... (௫௨)

ஆகுமேகுருபாம வேமஞ்சூல- மவுரியிந்திரகோபமக் கினியி ன்கட்டி, வாகுபெறுமீனமளர் புனுகுகாவி- மலைருத்வெண்காரமய நாகம்வள்ளி, தோகைகொக்கோடுதலைப் பிள்ளைகன்னி- துத்திவெள் ளையாவரைசோமநாதம், சாகுஞ்சன்யாசிமண்டை தொட்டிபூரஞ்- சமாதிநிலவுப்பொடிரஞ் சங்கமாமே .. ... ... (௫௩)

சங்குகண்டங்கத்தரிபொன் மத்தம்வித்து - சாமீசமகரமொடு சாளக்கிராமம், வஞ்குசிங்குபுரியட்டம் பஞ்சமித்திர- மதியிரவிசோ டசமா மதனப்பூடு, குங்குமங்கோ ரோசனைகோ மயங்குருத்துக்- கொன்றைகொடி ரசம்பூர்ணமிராசவர்க்கம், அங்கமுள்ள தாதுகத்த முருளைதேர்க்கா- லங்கிளிச்சுன்னமுட்டை யானைக்கல்லே... (௫௪)

கல்லான யேகசவுக் காரம்வியாக்கிரங் - கருவிதொகையான தொண்ணூற் றுறுமாச்சு, சொல்லான நூற்றிருபத் தைஞ்சின்பே ரைச் - சொல்லுகிறேன் புலத்தியுவத் தெருப்பைக்கேளு, வில்வேறு

கையுளக்கருவஞ் சனக்குடக்கு - விஞ்சைபகலவன்விளக்கு வேதைகஞ்சன், புல்லானவாமணக்குக் கானல்வேனல் - புங்கபருக்காலவிருள் போகுநாளே ... ... ... ... ... (நரு)

## ௱உரு - சரக்குகளின்பெயர்.

நாளானவிந்துப்புக் கழற்கொடிக்காய் - நார்த்தைவிடமூட்டிசிற நாகப்பூச்சி, நாளானநாகல்கட்டம் பறவினெச்சம் - நாட்டுசர்த்கரைவேகாத் தலைக்கல்சஞ்சம், கோளானகஸ்தூரி யஞ்சமூத்துக்கோளகபாடாணநா யுருவிகுப்பம், நீளானமூகிபாடாணம்மேர்செட்டி - நிர்வாணமாக்கிராணஞ் சலநீருப்பே ... ... (நசா)

உப்பானவைங்காயம் பசுமைபச்சை - யுடலுயிர்தம்பனந்தாது கருவோடூழி, செப்பானபந்துக்கு நாபிபிராணன்- சித்திரைபங்குணிசில்சரி காதுவட்டை, மெய்ப்பானகிரியுத்யமத்தமேரு- மேவுவிசை தருமபுகஞ்சல்மித்ருசத்ரு, துப்பானபவளமனோசிலை துரட்டிசூரியனை பாடாணந் துய்யதாமே ... ... ... (நஎ)

துய்யசத்திசிவஞ்சீனக் காரஞ்சுப்ரஞ் - சுந்தரிதாண்டவநீலன் சோதனைக்கல், ஐயமின் மினிமதனகாமரூபி - யடலையணிமாலகிரி தூற்றலன்னஞ், செய்யபுதுநிலம்பருதி பலமத்தாமன் - கொடியுமரிகுடவியகந் தேய்வுகட்கம், குய்யமாவிபிசமணி பூரம்வட்டங்கோடைகுளியானைரசக் குளிகுண்டாமே ... ... (நஅ)

குண்டான காரமூடி மலங்கறுப்புக்-குதிரைகெந்திபூரோகங்கோவனூர்மண், உண்டானநிமிளைபொன்னி யிணங்சனாத்தை- யுயர்பிரமனுயிரவன்பா லுன்றைப்பிள்ளை, பண்டானசவுடுசுக்கி லம்பாழ்நத்தம்-பஞ்சபட்சியிரங்குவத்துப் பாறையுப்பு, வெண்டானம்போன்றகல்லுப்புக்கட்டி - வீரம்பிருதுவிபூநீர்விளம்பினோ ... (நக)

விளம்பினவோர்நூற்றிருபத் தைஞ்சுமாச்சு - வெவ்வேறே பிரித்தெடுத்து வெளியாய்ச்சொன்னேன், தளராதேபிரமகற்ப சுன்னத்தோடே - தாழ்வில்லாமூந்நூற்றே டிருபதாகும், இளம்பிறைவந்துதித்துவளர்ந் திலகுமாபோ - லிந்தவகைப் பொருள்களெல்லா மொன்றுக்காகும், பழங்கனிந்தரசம்போல விந்தநூலைப்- பாடினேன்கருவறிந்து பார்த்திடீரே ... ... ... (சம)

பார்த்தறிந்திந்தவகைப் பெயரையெல்லாம் - பாடினார்நூல்களிலே பாடைமார்க்கம், சேர்த்தறிந்துபாராம லுலகவாதி - செப்பினவோர்சரக்கொன்றைத்தியிலிட்டு, நீற்றினதிற்கிரியையில்லை யென்றேயேங்கி - நினைவுகெட்டுப்புத்திகெட்டு நிசமூங்கெட்டுச், சூத்திரமுங்காணுமற் குருவில்லாமற் - றுயர்க்கடலில்லேவிழுந்து சுழன்றிட்டாரே ... ... ... ... ... ... (சக)

## இவர்களுக்கு வாதமுடியாதெனல்.

சுழன்றலையும்பாவிகட்கு நூலுமுண்டோ - துன்மார்க்க ரீட ருக்குக் குருவுமுண்டோ, உளங்கனியாச் சண்டாளர்க் கிரக்கமுண் டோ - வுப்பைவிட்டபேர்களுக்குப் பொன்னுமுண்டோ, களங்க மனமுடையோர்க்கு ஞானமுண்டோ - கன்னிமயல்கொண்டோரு க் கியோகமுண்டோ, தளர்ந்தோர்க்குச் சையோக விருப்பமுண் டோ - சவுக்காரநிலையறியார் தாங்கெட்டாரோ ... ...(சஉ)

கெட்டதெல்லெனிலுலகில் வாதியெல்லாங் - கிருபையில்லா க்குருக்கள்சொன்ன கேள்விகேட்டுத், திட்டமில்லா மங்கையர்கள் தூரமான - திட்டமேபிரமகற்ப செயநீரொன்று, வட்டகையிற்று ன்வாங்கியதிலேபூர - மாட்டுவாரந்தவுப்பு வழிலையென்பார், சுட்ட பிணத்தையெடுப்பார் தலைநாண்மைஞ்சன் - முஞ்சுசவுக்காரமென் றுஞ் சோதிப்பாரே ... ... ... ... (சஙு)

சோதிக்க மையெடுப்பார் தயிலஞ்செய்வார் - துடியானதாம் பிரத்தை யுருக்கிச்சாய்ப்பார், பேதித்துச்செம்புசற்றே பசுமையா ளுற் - புடத்திலவைத்துக்காணுமை லுயிர்த்துச்சோர்வாக், வாதிக்குங் கைபாகந் தப்பிற்றென்பார் - வகையெனக்குத்தெரியுமிங்கே வாரு மென்பார், ஊதிக்கண்போனதல்லாற் காரங்காணு - ருப்பிருந்தவி டமறியா ருலுத்தர்தாமே ... ... ... ... (சச)

தானென்றபிரமவுப்பு வெளியுமாச்சு - சத்தமிட்டவங்குசிங்கு தலைகீழாச்சு, ஊனென்றபிண்டத்திற் கல்லுப்பாச்சு, துப்பிருந்த பாண்டமன்றோ மண்ணுமாச்சு. ஏனென்றரவியாலே யுருவுமாச்சு- திந்தென்றமதியாலே குருவுமாச்சு, கானென்றமாரி கடந்தமுதமா ச்சு - காயசித்திவாதசித்தி காணலாச்சே ... ... (சரு)

காணவேசுத்தகெங்கை தீட்சைமார்க்கம் - கபடமதாப் பாடி வைத்தார் சித்தரெல்லாம், பூணவேசெந்நீரும் பனிநீராலே - பொ ய்யாதுவழலைவிந்து பொன்னுமாகும், தாணுவன்றோ சடைமீதிற் றரித்தாரந்தச் - சந்திரனைக்கையாலே தடுப்பாருண்டோ, தோண வேவிந்துக்குத் தீட்சைநீரிற் - சொல்பாடைதனைப்பிரித்துச் சொல் வேன்கேளே ... ... ... ... ... (சசா)

## தீட்சைநீரின்பெயர்.

சொன்னவொரு சாரயத்திநீர்கள்ளு - சுரோணிதமூலப்புளி நீர் சோமன்செந்தேன், கன்னிருதுவமூரிமூலை பற்ச்சாறுகுங் கல் லருக்கன் பால்செயநீர் கவந்தக்காக்கை, அன்னமூற பிரவாகஞ்சு த்தகெங்கை - யாற்றுவெள்ளங் குதம்பையொடு கிலிஞ்சல்வத்து,

வஹ்னியினிற்புகைசருகு வேர்வைதூமை - மதிபோகாப்புனலமு தமதுவென்பாரோ ... ... ... ... ...(சஎ)

மதுவாலேபுவனைதிரி புனமேனிப்பால் - வளர்கழுதைகுருதி வே சரிநீர்தத்தம், சதுர்பெருகுகிறுநீர்பூச் சாரமூசி - சத்திநவாச் சாரம்வென் கருநீர்தண்ணீர், மதியிலுறுபிராணவநீர்பனிநீர்நாகம்- பாலேயிளங் குமரிதிரா வகங்காரசிப்பி, உதகபடிகநீர் தாளிச்சா ரூ-மூன்றுளிர்கும் பிடுங்கல்கங்கையுப்புநீரே ... (சஅ)

உப்புமதமறுவகைநீர் தயிலஞ்சோரி-யுகாரவெழுத்தகாரமவெ ழுத் தோகாரம்வன், டப்புபஞ்சதீட்சைதசமகண்டகுன்ன-மைவி ரலிகாந்தமல ரொட்டிச்சாறு, செப்புசரஸ்வதிதீர்த்தம்யோகதீட் சை - சிவதீட்சைசோடசம் ரீங்காரதூபம், இப்புவியிற்சம்பளஞ் சையோகநாலெட்டெலீபர்பாடைத்தொகையெண்பத்திஞன்கே

எண்பதிஞற்றீட்சைவிதி ரூடிவில்லாம - விசைத்தாரோகுத்தி ரத்துக் கிணக்கமாக, முன்பினறியாமலிது வதுவோவென்று - மூ டர்கட்நினைவுமற்று முட்டிப்போட்டு, வம்புசொல்லிவாய்குழறித் தர்க்கம்பேசி - மயிர்பிடித்துத் தெருவில்வரும் வாதப்பேய்கள், கும்புகண்டாலவர்களிடஞ் செல்லவேண்டாங்- குருமுறைக்கென் னூல்தேடிக் கூர்ந்துபாரே ... ... ... ...(ருய)

கூர்ந்துபார்முப்பதிலே கைபாகங்கள்- குணமானவைம்பதி லே குருவின்பாகம், நேர்ந்துபாரெண்பதிலே வழலைமார்க்க-நிச மானநானூற்றிலிடைநேர்பாகம், சார்ந்துபார்மதிவெண்பாத்தீட் சைபாகஞ்-சவுமியமாமாயிரத்தி லநேகபாகம், தேர்ந்துபாரிந்நூ லிற் பாடைபாகஞ்-செப்பினேனிந்தநூல் சிவனுரொப்பே (ருக)

சுத்தகங்கை.

நூலிலேசுத்தகங்கை நீ[illegible]க்கேளா - யுரோமருஷியைந்நூற்றி ஞுணுக்கங்காணும், பாலெனவேசுத்தகங்கை தன்னைப்பெற்ற- பா வைக்குமுகநாலு காரூனேழு, மேலெல்லாம் பஞ்சவன்னங் கை தானெட்டு - விரல்பதிஞறெருசெவ்வாய் கலேதாமொன்று, சூலெ ன்வேபத்துநாள் சென்றபின்பு - சுத்தகங்கை யென்ரெருபெண் பெற்றிட்டாளே ... ... ... ... ... (ருஉ)

பெற்றிட்டபிள்ளைபிதா சந்திரனுச்சு - பிறந்தவுடன் மறுநா டா னிறந்துபோச்சு, உற்றவுதயாதியினிற் பிறந்தபிள்ளை - யுதவும ல்லாற்செத்தபிள்ளைக் குயிர்தானுண்டோ, இத்தனையும்பெற்றெடு த்ததாயின்கண்ணே - யெண்பத்துநான்குயிர்க்குமிசைந்தயோனி, சித்திபெறச்சிவசத்தி யிரண்டுங்கூடிற் - சிவசிவாசகலசித்துஞ் சிக் குந்தானே ... ... ... ... ... (ருா)

சிக்குகின்றவாயின்ற ஞுதந்தானே-சிவகங்கையாகாசத், துந்த
ண்ணீராம், முக்கியமாய்முதற்பிறப்புச் சமுத்திரத்தின் - மூத்தவ
ளுக்கிளையவளாமோடிகாரி, சருக்கரைபோற்கனிவாச்சிபச்சைமே
னிச்-சந்திரனைக்கண்டவுடன்முன்னைசேர்ந்தாள், கொங்கிறகுபோலா
னுண்மறுசெல்மத்திற்-கோதைக்குக்குடியிருப்புக்கொண்டமுனே

கொண்டலிலேதானிருந்து சிலநாட்சென்று - கொடுமையுள்
ளசென்மமதாய்ப் பிறந்தான்மண்ணில், கண்டவருங் கேட்டவரு
ஞ் சிரிக்கலாச்சு-கன்னிகுடியிருந்தவிடம் பாழாமென்று, வண்டர்
களெல்லாம்விலகியொதுங்கிப்போனார்-மதிசிறந்தபெரியோர்கள்
வணங்கிநின்றார், தொண்டர்களைக்கிருபைவைத்துப்பிழைக்கச்செ
ய்து-துகளிலாப்பிரணவமே சுயம்புநீமோ ... ... (௫௫)

நீரானகல்லுப்பு நாதச்சுன்ன - நீற்றெடுத்தாற்பிறகுநிசமாகு
ங்கங்கை, ஊறுகின்ற சலந்தனிலே சிவமுஞ்சேர்ந்தா-லுத்தமனே
சிவவுப்புக் குருவுமாச்சு, மேருவிலேயிருந்தசித்தர் சொன்னமார்
க்கம் - வெளியிட்டுச்சொல்லிவிட்டேன் விள்ளவேண்டாம், பேர்
பெறவேவேண்டுமென்றார் சூத்திரத்தின் - பிரமாணக்கருவையினி
ப்பேசுவேனே ... ... ... ... ... (௫௬)

மோக்ஷமடைய.

பேசவேபிரமாண மறிந்தோன்சித்தன் - பிரமவுப்பைக்கண்
டவனே குணசிரேட்டன், வாசிதனையோடாமன் மறித்தோன் சித்
தன் - மாயைதனைவிட்டவனே மவுனமுத்தன், பூசைதனையறிந்தவ
னே கிரியைபெற்றோன்- பூவுலகத்தோடிருந்தோன் சரியைமார்க்
கன். ஊசரத்தினீர்பிரித்தோன் தீட்சைபெற்றோ-னேகோகோஞா
னமெல்லா முலகுதானே ... ... ... ... (௫௭)

உலகுமுதற் சரியையோ வருத்தாபத்தி - யுற்றுநின்றகிரியை
வைதீகமாகும், பெலமானயோகம் வாதம்மிரண்டும், - பேசுவாரு
வமானப் பிரமாணத்தால், நலமானஞானமதே யதார்த்தமாகு-
நான்குமிந்தப்பிரமகற்பத்தாலேயல்லால், பலபலயோசனைசெய்
து மயங்கவேண்டாம் - பரமசித்தர்மறைவாகப்பாடுநூலே (௫௮)

நூலதனிற்பெரியோர்சொல் கருத்தாற்பத்தி-நோக்கமில்லா
திருந்தக்காற் சரியையாகும், மால்செய்யு மரந்தனிலே பேயுண்
டென்று - மனத்துதித்தாலைதீக கிரியையாகும், மேலுவமைமகளை
பசுப்போ லென்றல்யோகம் - விசாரணையாத் தியும்ரச வாதவே
லை, காலகருவெனக்காண்டல் பிரத்தியட்சம் - கதிதருமெஞ்ஞான
மெனக் காணலாமே ... ... ... ... (௫௯)

## யோகம்.

ஆகுமேபுகையதனைக் கண்டுவெய்ய -வக்கினியுண்டென்பது வே யனுமானந்தான், போகுமிந்தப்பிரமாணத் தனுபவத்தைப்- புகலுகிறேன்புலத்தியனே புத்தியாய்க்கேள், சோகமில்லர்வக்கினி யேநகாரரூபந்- தூமமேய னுமானமாகும்பிண்ட, தேகமேபுகை யானூற்புகையையீன்ற-தீக்காட்டமங்கென்றே தெரிந்துகொள்ளே

தெரிந்துகொள்ளுந் தூமத்தைக்கண்டேயங்குத்- தீயிருக்கு மென்பதைநீச் சயித்தாற்போலும், அழிந்துவிடும் பிண்டமதேதவ மூலமெண்ணி - லப்புகைதானெருப்பாகி லதுவுமெய்யே, எழுந் தபுகையாகுமிந்தக்காயவுப்பே- யெரிதுரும்புமக்கினியு மெங்கெ ன்றேபார், குளிர்ந்தபுகையக்கினியு மொன்றேயொன்று- கூறினு ரனுமானக்குறிப்புத்தானே ... ... ... (௬௧)

குறிப்பானயோகத்துக் குவமானத்தைக்- கூறினேன்புலத்தி யனேகூர்த்துபாராய், வெறிப்பானவஸ்துவென்றேவெறுநீருக்கு மெஞ்ஞானமதியமுத விந்துவுக்குஞ், செறிப்பாகவுவமான மொ ன்றுக்கொன்று- செப்பினர்சாரரயந் தனைக்கொள்ளென்றே, மறி ப்பானபுத்தியினுற் புகைநீருண்டு, காளாமன்மதியமுதம் வாக்கா லுண்ணே ... ... ... ... (௬௨)

## வாதம்.

உண்ணவேமவுனரச வாதயோக- மூத்தமனேவாணிரச வாத தாது, விண்ணுறையும்யோகரச வாதத்திற்கு - விந்துநாதப்பொ ருளை விளம்பக்கேளு, தண்ணிறையுந்தாதுரச வாதத்திற்குச்- சது ரானலவணமதேவிந்துநாதம், பண்ணரியவிரண்டிற்கும் பேரொ ன்றாகும்- பாடையினுலுவமானம்பகறிப்பார் ... (௬௩)

பாரப்பாவிரண்டிற்கு மொருபேரிட்டுப் - பாடினுருவமா னப்பாடையாலே, வாரப்பாநாதவிந்து வழலைக்கும்பேர்- மவுன மென்றறிவயோக வாழ்க்கைக்கும்பேர், ஆரப்பாவிதையெடுத் தறி லேசொல்வா - ரதையெடுத்திதிற்புகட்டி யதுவாமென்பார், கூரப் பாநாதவிந்து முடித்தபேர்க்குக் - கூச்சமற்ற ஞானமென்னும் பொருடான்வாய்க்கும், சாரப்பாலவணவிந்துபூமிநாதந் - தமை யறிந்துமுடித்தவர்க்குத் தங்கமாமே ... ... (௬௪)

தங்கமதையுண்டாக்கும் விந்துநாதஞ்-சாரமென்றுங்காரமெ ன்றுந் தருமேபூமி, வங்கென்றுஞ்சிங்கென்றும்பூமிநாத-மதியிரவி சுழுமுனையின் மாட்டக்காணும்,திங்களென்றவுடல்சித்தே யதற்கே பூமி-திருக்கொடுக்கமாட்டாமற் செகத்துள்ளோர்கள், தங்கள்பஞ் சேந்திரியஞ்விந்து நாதம்சவுக்காரமென்றெண்ணித்தவறுண்டாரே

## கிரியை.

தவறுமல்யோகமொடு வாதத்திற்குஞ் - சமாதானமானபிர
மாணஞ்சொன்னேன், பவமானகிரியையெனு மைதீகத்தின்- பா
டைதனைப் பிரித்துரைக்கப் பண்பாய்கேளு, கவரானமாந்தனி
லேபேயுண்டென்று- கைகாட்டப்பேயின்றன் கண்ணிற்கண்டாற்,
சிவமானமந்திரசித்தி யுண்டாமென்று - சிந்திப்பதேகிரியை செ
ழிக்குந்தானே ... ... ... ... (௬௫)

## சரியை- ஞானம்.

தானென்றசரியைக்குக்காய்யார்த்தந்- தருமத்திற்குறுதிமெ
ஞ்ஞானமாமென், றீனமறுபாக்கியவான்ருபத்ரமேயா- ளிருவளையு
ஞ்சாட்சியெனவெடுத்துக்காட்டில், ஊனென்றசரியையிது பத்தி
யாச்சு- துத்தமனேஞானபிர திட்டைகேளு, நானென்ற விருத்தி
தனிலூற்றுப்பார்த்து- நல்லகட்டையென்றறிதல்ஞானமாமே ()

ஞானமென்றபிரமாணமூலங்கண்டா- னலமான நூற்குறிப்
புநன்றாய்த்தோற்றும், வானமென்றயோகசித்தி காயசித்தி- வாத
சித்துங்கைவசமாம் வகாரத்தாலே, கியானமென்றே னூறென்றே
னெங்கேயென்றேன்- காயசித்திபெற்றதிசக் கருத்துளோர்க்குப்,
பானமென்ற ஞானசித்தி முத்தியாகும்- பஞ்சசுன்னக் கருவைவயி
ளிப் பகருவேனே ... ... ... (௬௮)

## பஞ்சசுன்ன விவரம்.

பகருவேன்குக்கிடத்தின்சுன்னமொன்று- பரிவானகற்கிளிஞ்
சிற்சுன்னமொன்று,நிகரில்லாவெள்ளைக்கற்சுன்னமொன்று- நீரான
கடனுரையின் சுன்னமொன்று, சுகமானவலம்புரியின்சுன்னமொ
ன்று - துகளிலாவஞ்சுவகைச் சுன்னத்தாலே, தகைபெற்றுசீர் நாத
மதைச் சுண்ணம்பாக்கிச்- சாகரநாதஞ்சேர்க்கத் தண்ணீராமே ()

தண்ணீராஞ்சிவகங்கை சுத்தகங்கை - தாயானபிராணனுமே
சந்திரபானம், கண்ணீராஞ்சத்தியெனு நாதத்துள்ளே - கலந்தப
ரப்பிரமவிந்து கலந்ததானால், ஒன்றானசுக்கிலமூங் குருவுமாச்சு-
ஓகோகோதங்கரச மூதித்ததம்ம,மைமண்ணேடுபுலமுதலா வேமமா
ச்சு- மாறுமலித்திரன்போல் வாழ்வுண்டாச்சே ... (௭௰)

## சத்திதீட்சைவிவரம்.

வாழ்வானசத்திக்குத் தீட்சைமூல- வகையறியச்சொல்லாது
நூல்கடோறும், தாழ்வில்லாசத்தியுஞ்சிற் சத்திக்குள்ளே - தான்
கலந்துமூன்சென்மந் தானேசென்றாள், கோளேதுமில்லாத நாத
சுன்னங்- கூறுமந்தச்சுன்னநவ சுடலின்மூழ்கித், தாளானபிரணவ
நீர்தானுமாச்சு - சவுக்காரசெயநீராச் சாற்றினேனே........(௭௧)

சாற்றுகின்றசிற்சத்தி பஞ்சமித்திரஞ்- சத்திக்குப்பின்புதித்த போகசித்தி, வேற்றுருவுபோலிருந்தா ளுயிருமாளுண்- மேதினியோர்க்குபகாரி பஞ்சமித்திரம், தோற்றுகின்றபஞ்சமித்திரந்தீட்சைவிட்டாற் - சுத்தகங்கையாகாது நாதசத்தி, காற்றடிக்குங்காந்த மலர் கடலுஞ்சேர்ந்தாற்- களாகாணுவாதசித்தி கைக்குள்ளாச்சே.

ஆச்சப்பாசிவத்திற்குத் தீட்சைமார்க்க- மைந்நூற்றிற்சொல்லுகிறேன் விரிவதாக, மூச்சப்பாநாதமெனு மூன்னிற்பின்னின்-முதண்டபிரணவமாஞ் செயநீர்க்குள்ளே, தோச்சப்பா வபிடேகஞ்செய்யச்செய்யத்- தோடமெலாம்விலகியே சுயம்புமாச்சு, நீச்சப்பாகடல்கடந்தே யமுதமாச்சு - நிசமாச்சுசிவதீட்சை நினைவாய்ப்பாரே ... ... ... ... (௭௩)

நினைவாகப்புருடனுக்குப் பெண்மேல்மோக - தெரிசுரிபூங்குழன்மகட்காடவன்மேன்மோகம், கனமருவுமிருவருமே கலந்தபோது- கமலமலர்வதனமோடுதிக்கும்பிள்ளை, இனிதானபிள்ளையினுலெல்லாமுண்டா - மிந்தவிதமாயிருக்குந் தீட்சைமார்க்கம், வனவாசமாய்த்திரியும் வேடத்தோரே- மன்னவர்க்கு மங்கையர்க்கும் வயதுகேளே ... ... ... ...(௭௪)

மங்கையெனுமுகாரசத்தி நாதத்தாய்க்கு - வயதுபத்துச்சந்திரன்றன் மகளுமானாள், திங்கண்முகம்போலிருப்பாள் சிறியகன்னி- திரண்டபின்புகுடிலைவிட்டுத் தெருவில்வந்தாள், கங்கணத்தியென்றொருவன் காப்புமிட்டான்- காலெடுத்தே காலிகந்தைக்கிட்டான், பங்கமில்லாவயதுபந்துச் சென்றகன்னி- பசிதவிர்ந்தவாதிமுகம் பார்த்திட்டாளே ... ... ... (௭௫)

இட்டவொருமன்னவனே யகாரவிந்தெ - யென்சொல்வேன் பதினறுவயதுமாச்சு, சுட்டகதிரோனிடத்திற் பிறந்தபாலன்-மேருகையெனும்பெண்ணடுத்துவாழ்ந்ததீரன், இட்டவிதியேவவனும் வெளியேறும- லெண்ணிரண்டுமுழத்துள்ளா யிருந்துபோனான், பொட்டலென்பாரிருவர்களு மிருந்தவீடு- புலத்தியனேகுத்திரத்தைப் பொருந்திப்பாரே ... ... ... (௭௬)

பொருந்துகின்றகாலமெனு மீனமேடம் - பூவையரும்வளர்பிறையிற் பூரிப்பானுள், திருந்துகின்றபுருடனுக்கு மீனங்கீழே-தேய்பிறையாம்பதினறிற் செனிக்குங்காலம், அருந்திருந்தவிரண்டுக்குங் குணங்களுண்டா - லடையாளமூண்டோரவை யடர்கமூண்டு, வருந்திவிளைகின்றவொரு காலமுண்டு-வனமூண்டுநகருண்டு மகிழ்ந்துகேளே ... ... ... (௭௭)

கேளையாவளர்பிறையிற்பிரதமையொன்று-கொடியர்னதுவிகைதிருத்திகைமற்றென்று, நாளையாசதுர்த்திபஞ்சமிதானென்

று நலமான சஷ்டிசப்தமிதானென்று, வாளையாவஷ்டமியு நவமி
யொன்று வண்டசமியிவைபத்துமகத்தாந்தீட்சை.ஆளப்பாதசமி
யிலேமூடிந்தபிண்ட- மதுதப்பிற்சுத்தகங்கை யாகாவாறே...(௭௮)

ஆகாதுதேய்பிறையிற் பிரதமைதொட்டேற்ற - வமாவாசை
பதினைந்துக்கடுத்தநாளில், சாகாதகாலுக்குட் பிரமகற்பந் - தாண்
டிறூற்சிவநீங்கிற் றவறுண்டேபோம், வேகாததலையன்றேவுப்புப்
புப்பு-மேலாகவளர்கலையே யப்பப்பப்பும், போகாதபுலனன்றே
சுத்தகங்கை- பூரணமுங்காரணமும் போதிப்பேனே... ... (௭௯)

போதிக்குமுப்பூவேமுப்பாழாச்சு - புரியட்டபூரணமு ம
துவேயாச்சு, நாதிக்குமிடந்தனிலே யெழுந்தவுப்பு-நன்றானகால
டியிற்சமாதியாச்சு, சாதிக்குநலமொன்றிற் சத்தியுப்புச் - சந்தி
ரனுஞ்சூரியனுந் தாங்கிப்பாராய், வாதிக்குமானிடரோவஙிவர்நல்ல
மகாமவுனயோகியர்க்கே வாய்க்குமன்றே ... (௮௰)

வாய்க்கவேசிவனுக்குப்பாலைமுல்லை- வளர்குறிஞ்சியிவைமூ
ன்றும் வன்மையாகும், சேர்க்கவேசத்திக்குமருதசெய்தல்- செ
ழிப்பானதலமென்று செப்பினாலும், ஏற்கவேபாலை யென்றுமுன்மு
தலாம்பூமி- யிரண்டிற்குங்குறிஞ்சிமுல்லை யிறப்பநன்று, பார்க்க
வேவனதீரம் பொடிபண்பொட்டல்- பங்குனியுஞ் சித்திரையும்ப
னிவுதானே ... ... ... (௮௧)

பதிவானகரிசனில மடுக்கொண்ணாது- பருங்கடற் றன்னீரா
யடுத்திருக்கலாகா, சதுரானமலைபருவித்தண்ணீராகா-சமரசமாவி
ருக்கின்ற தலமேவேண்டும், க்திரானபாலைநிலம் வண்டல்பொட்
டல் - கன்னிவனஞ்சிறுகாசா கவந்தபூமி, விதிசானுஞ்சுக்கான்பா
ரிவைகள்கண்டால் - விமலசதாசிவஞ்சத்திமேவும்பார் ... (௮௨)

மேவுமேகன்னிதுலா மீனமூன்றில் - வேளைதிதியுச்சமொடு
சமபாவத்தில், காலைதிரிபுனைபுவனைவாலைமூவர்க் -கண்டுறுதி காம
லைசயோகமூட்டிப், பூவானரவிமூத்தா யிந்துமூத்தா- பூரகத்து
மனதூன்றிப்பூசைமேவித்,தேவிவிந்துசிவவிந்தவிரண்டுங்கண்டு
சித்தாந்தஞானமுதற் றியானஞ்செய்யே ... ... (௮௩)

செய்யவேமனோவிருத்தி யவித்தைதன்னைச்-செந்தியிலிட்டு
வறுத்திட்டார்பின்னும், வையகத்தின் முளையாது ஞான முத்தி-
மாதவத்தோர்க்கெய்தும்ரசவாதவேலை, உய்யவென்றுநற்சீடர்த
னக்குச்சொன்னே - னுத்தமனேநாதவிந்தி னுண்மைபார்த்தே,
ஐயமில்லாவுள்ளத்தோ டிரண்டாங்காண்ட - மருளுகின்றமுறைப்
படியே தெரிந்துசெய்யே ... ... (௮௪)

தெரிந்துருச்செய்கின்ற குருவின்பாகந் - தினையளவுந்தப்பாது கைபாகங்கள், தெரிந்துரைத்தபடியேநீ குருவைச்செய்து - சிவயோகவாழ்க்கையிலேசித்தமாகி, விரைந்துதமக்கேதேனும்வேண்டுமென்றால் - வேதையிட்டுச்செலவழித்து விரைந்துதள்ளி, இதவிலாணவக்கருத்தை யொடுக்கிமுத்திக் - கேணியாம்யோகத்தி லிருந்தேருமே ... ... ... ... ... (அ௫).

ஏறுதற்குநூன்முடிவந் நூலின்பாடை - யியம்புகிறேன் சித்தமதி னியல்பையெல்லாம், ஆறுமேயானைகண்ட குருடர்போல - வறியாதபிள்ளைமாற்றறிவானென்றும், பாறுமேபசியமண்ணுந்தண்ணிரொன்றும் - பகர்கஞ்சநாதத்தி னுதமென்றும், காறுமேகள்ளனை வெள்ளனைநீர்ப்பந்தல் - காட்டுமென்றுமின்னம்வெகு கதைசொல்வாரோ ... ... ... ... ... ... (அ௬)

சொல்லுநெருப்பாறுமயிர்ப்பாலம்பேர்லச் - சுண்ணும்பிலேயிருக்குஞ் சூட்சமென்று, மில்லறமேநல்லறம தாகுமென்று - மிறைத்தாரைக்காத்தபள்ளமூண்டேயென்றும், வல்லமுத்துமாணிக்க நீலமென்றும் - வண்ணானுக்கேதெரியும் வகாரமென்றும், வில்லோசையென்றும்வீட்டுக்குள்ளென்றும் - வித்தையுள்ளதிட்டாந்தம் விளங்குநூலே ... ... ... ... ...(அ௭)

விளங்குமிந்நூல்களிலே கதையின்பாடை - விவரமெலாமூணாக்கவென்றாற் பெருநூலல்லால், உளங்குளிரமுதற்காண்டமொருநூற்றுக்கு - ளொடுக்கமாவெடுத்துரைத்தேனுண்மையெல்லாம், பிளிறுகின்றயானைகண்ட குருடேதென்றாற் - பிரணவமாமெழுத்துறுதி பேணிப்பாராய், இளங்குழந்தைமாற்றறிவா னென்றசொல்லி - மெண்ணூழிவயசுபத்து மிசைந்ததாமே ... (அ௮)

மாதுமண்ணுந்தண்ணிரு மப்புமுப்பும் - வரைகஞ்சநாதமென்றால் வாழைத்தாது, காதலனும்வெள்ளனைக்கள்ளனைநீர்ப்பந்தல் - காட்டுமென்றாற்பிரமகற்பக் கல்லின்பூமி, வேதமெனு நெருப்பாறு மயிர்ப்பாலந்தான் - வேதையிட்டு லோகத்தில் வெள்ளிமூலம், சூதபியுஞ்சுண்ணாம்பிற்சூட்சமென்றாற் - சுத்தசலம்பிறப்பதற்குச் சுன்னமெண்ணே ... ... ... ... ... (அ௯)

எண்ணவேயில்லறநல் லறமென்றக்கா - லிசைந்தபஞ்சநிலமதிலே யிசைந்தபூமி, கண்ணவேயிறைத்தவரைக் காக்கும்பள்ளங் - கைபாகங்காண்பதற்குக் கருதானையா, வண்ணமுத்துமாணிக்கநீலமென்றால் - வழலையெழுபிறப்பான விண்ணின்கூறு, சொன்னவகையறிவதுவே வண்ணானென்றால் - துவைப்பதற்கு வெள்ளாவி தோன்றும்பாரோ ... ... ... ... ... (௯௰)

தோன்றாதவில்லோசை யென்றாற்சூதந் - தொகையானவிட்டுக்குளுண்டேதென்றால், காணாதபிரமகற்பக் கல்லென்றேபேர்-காட்டினார் நூல்களிலே காணுதெல்றே, பூணாதகதைகளின் னும்வெகுவாயுண்டு - பொருளெல்லாமுப்பினுக்குச்சுத்திக்கல்லால், வீணாவசொல்லென்று நினைக்கவேண்டாம் - வெளியாகப் பாடைதனை விண்டிட்டேனே ... ... ... ... ... (கூச)

பஞ்சாட்சரம்.

விண்டுசொல்லுஞ்சத்தமுதற் பதினெண்பாடை - விளங்குகின்றவட்சரமாம் விருத்திக்கெல்லாம், பண்டுவந் தாயிரெழுத்தைப் புலத்தியாகேள் - பண்பானவகாரமென்று மிகாரமென்றும், கண்டு சொல்வேனுகாரமென்றுமெகாரமென்றுங் - கருவானவொகாரமென்று மித்தவைந்தும், அண்டர்பிரான்சொன்னவெழுத் தைஞ்சும் வேத - மாகராநாதத்துக்கருளிதாமே ... ... (கூஉ)

அருளானவெழுத்தைஞ்சு மில்லாவிட்டா - லப்பனேபுகலாது சத்தமொன்றும், பொருளானவட்சாமு மற்றபோது - போதித்த நால்வேதம் பொய்யாய்போச்சு, தெருளான வுயிரெழுத்தொன் றில்லாவிட்டாற் - செத்தெழுத்தாற்காண்டம்விண்டு செப்பலாகா, மருளானவெழுத்தைஞ்சும் பிறப்பெங்கென்றால் - மைத்தனே யூமையெழுத்தாகுமாறே ... ... ... ... (கூங)

ஆறான வூமையென்றாலா ணுமாமாச்சே - யப்பனேயறிவாச்சு மயங்கவேண்டாம், கூறானவூமையெழுத் தொல்றினாலே - கூசாமலஞ்செழுத்தும்பிறக்கலாச்சு, மாறானமவுனவெழுத் தறியவென்றால் - மனமழுந்திவிட்டக்கால் மவுனந்தோன்றும், தேறானமனமன்றோபிரமவித்துக் - செப்புகிறேன்ஞானவழி திரமாய்ப்பாரே.

பாரப்பாவழலைக்கேயிலக்கப்பாடை - பாங்கானவட்சரமாம் பாடையோடு, கூரப்பா நூற்பாடைதேசபாடை - குருமுடிக்குங் கைபாகக்குருவின்பாடை, சீரப்பாபரிபாடையோகபாடை - சித்தரெல்லாம்பலபலவாச்செப்பும்பாடை, நேரப்பாவிவையெல்லாமைந்நூற்றுக்கு - ணிறைநிறையாச்சொன்னதிறனைக்கண்டதாமே ()

இந்நூலிற்சொல்லியவிபரம்.

ஆகுமேமுதற்காண்டம் வழலைகங்கை - யாதியிலே பிறப்புமதின்பெயருஞ்சொன்னேன், சேகரமாவிரண்டினிலே குருமுடிக்குஞ் - செய்பாகக்கைபாகத் திறத்தைச்சொன்னேன். பாகமதாமூன்றினிலே கற்பமூலம் - பதியானயோகமதைவகுத்துச்சொன்னேன், வாகுபெறநாலினுக்குள் ஞானசார - மணிமுடிக்கும்வயனமெலாம் வழிகண்டேனே ... ... (கூரு)

அழியானவைந்தாங்காண் டத்தினுள்ளே - மறைத்தபொருட்
பாட்டையெலாம் வகைகள்காண, நெளிவிலாக் காண்டத்திற் கருக்க
ளெல்லா - நிகழ்த்தினேன் பல்பொருட்சொல் காண்டமென்றே,
சுருவாகக்கருவழியக் கடைக்காண்டத்தைச் - சோதித்தாற்றோன்று
மே தோன்றுமெல்லாம், வெளியாகுமிந்தநூ லஞ்சுகாண்டம் -
வேதமென்றேசித்தர்களும் விளம்பினாரே ... ... ... (௧௭)

விளம்புகின்றவழலைக்கு மூலமொன்று - விளைசயானசுத்திக்கு
மூலமொன்று, தளும்பாதகும்பகமாமவுனமார்க்கந் - தாங்கிநின்ற
யோகத்தின்மூலமொன்று, குளம்பானகற்பத்தின் மூலமொன்று
குளிகையெனுஞ்சாரணைக்கு மூலமொன்று, வளம்பெறவேஞான
த்தின் மூலமொன்று - வகையாறுமூலத்தின் வயனங்கேளே (௧௮)

வயனமென்றவழலைதனக்குப்பூமூலம் - வாகானதீட்சைக்குக்
கனலேமூலம், நயனமென்றயோகத்தில் வாசிமூல - நல்லவொரு
கற்பத்தில்ரசமேமூலம், குயனமென்றகுளிகைக்குப்பாட்டுமூலங்
குற்றமில்லாஞானத்தின் மனமேமூலம், தயினமென்றவினைக்கெ
ல்லா மென்னூல்மூலஞ் - சாரகாரத்துறையைத்தாக்கிப்பாரே (௧௯)

தாக்கிப்பாரிந்தநூலஞ்சுகாண்டந் - தலைப்பார்க்கிற்சமுசய
ங்கடள்ளுண்டேபோம், நோக்கிப்பாரிந்தநூ றனக்குச்சாட்சி - உ
ரோமருஷியைந்நூறு நந்திநூலும், தேக்கிப்பாரிதனுலேதெளியா
துண்டோ சிவசிவாகுருதேடித்திரியவேண்டாம், பாக்கியமாநூலத
னிலிரண்டாங்காண்டம் - பாடுகிறேன்முதற்காண்டம்பராமுத்தே

முதற்காண்டம் - முற்றிற்று.

## இரண்டாங்காண்டம்.

முத்தணிநகையாள்வேத முதல்வியைப்பாகம்வைத்த, சுத்த
மெஞ்ஞானதீபச் சுடர்ப்பெருஞ்சோதிபாதம், நித்தமுந்தொழு
தும்போற்றி நீதிசொல்பாடைநூலின், புத்திசேரிரண்டாங்காண்டப்
பொருளினைப்புகலுவேனே ... ... ... ... ... (௧)

புகலுமூற் காண்டந்தன்னிற் புகட்டினேன் வழலைமார்க்கம்,
செகத்துயருப்பின்தீட்சை சிவத்தில்பேர்செப்பினேனால், இகத்தி
னின்மூடஞான விருளினை யெளிதினீக்கும், பகலவன்போலுமிந்
தப் பாடைநூல்பயன்பெற்றோர்க்கே ... ... ... ... (௨)

பயனறியாதமாண்பர் படிக்கிலென் விடுக்கிலென்ன, உயிரி
னையடக்கிடாதா ருணர்பொருடெரிந்தாலென்ன, தலையுள்ளருணை

மிலாதார் தாட்டீகரானாலென்ன, சுயமதா ரூப்பையைவிட்டுச்சுட்ட தோஷிக்கொப்பாவார் ... ... ... ... ... .... ... (௫)

ஒப்பிலாவிரண்டாங்காண்டத் துறையறிந்தவனேவாதி, தப்பி லாச்சிவயோகத்திற் றலைவனுமிவனேயாகும், இப்புவிதனிலேதேக சித்தியுமிவற்கேயெய்தும், ஆப்பணிசடையோன்சொன்னா னறிந் திடுமறிவுளோரே ... ... ... ... ... ... ... ... (௬)

அரியவாம்ரசவாதத்துக் காதியாரூப்பொன்றேகாண், திரிவி தவழலைச்சுன்னஞ் செய்யுநீர்த்திட்சையொன்று, குருசெய்யுமிடை பாகத்தாற் கூட்டுகைபாகமொன்றிற், நிறையினையறிந்துளோர்க்கு நிட்டையுநிலைக்குமன்றே ... ... ... ... ... ... ( )

வேறு.

நிலைப்பதற்குச்சூத்திரங்க ளநேகமுண்டு- நீணிலத்திலிந்நூல் போற் கிடையாதப்பா, மலைக்குள்வளர்பெரியோரை யடுத்துக்கா த்து - மனமுருகிநின்றக்கால் வாய்க்குமிந்நூல், கலைத்தமிழிற்காப் புமுதற் கடையும்பார்க்கக் - கைகாட்டுங்குருவென்னக் காணுமிந் நூல், விலைப்படுத்தியுடல்வளர்க்குஞ் சண்டாளர்க்கு - விமோசன காலஞ்சிறிது மில்லைமாதோ ... ... ... ... ... ... (௯)

இல்லையென்றுகூறாமல் யார்க்குமைந்தா விந்நூலைச்சிவயோ கிக்கீதனன்றே, இல்லையென்றுசொல்லாமல் யார்க்குமைந்தா-விந் நூலைச்சொற்றவமூர்க்கீதனன்றே, இல்லையென்றுகழறாமல்யார்க்கு மைந்தா-வெறுவின்ஞானமுடையோருக்கீதனன்றே, இல்லையென்று ரையாமல் யார்க்குமைந்தா - விந்நூலைப்புண்ணியருக்கீதனன்றே.

நன்றானபிரமகற்பக் கல்லின்மார்க்க - நாட்டினேன்பாடை யினான்முதற்காண்டத்தில், இன்றுண்டோவுலகத்தில் வாதியெல்லா- மிந்தவிதங்கண்டறிவாரில்லையில்லை, அன்றேதானீசனெனக்குரைத் தவுண்மை - யப்பவிவ்விரண்டாங்காண் டத்திற்சொல்வேன், குன் றன்னவறிவுடைய புலத்தியாகேள் - குருமுறைக்கு வழலைதனைக் கூறுவேனே ... ... ... ... ... ... ... ... ... (௮)

வழலை.

கூறுவேன்வழலையிலே நாலுசாதி - கூசாமன் மூடித்துவைத் தார் சித்தரெல்லாம், தேறவாயந்தந்த வகையாதென்றாற் - சிறுநீ ராற்காச்சுகின்றவழலையொன்று, பேறுபெறச்சுண்ணாம்பு மூவருங் கூட்டிப்-பிசகாமற்காச்சுகின்ற வழலையொன்று, நாறுகின்றசயிந் தலவணங்கள்கூட்டி-நலமாகக்காச்சுகின்ற வழலையொன்றே, (௯)

ஒன்றானகளியுவர்மண் வீரம்வெள்ளை- யுள்ளபடிகாச்சுகின்ற வழலையொன்றே, என்றானவேன்மகனேவேம்புபுன்கி-னெண்ணெ

யிட்டுச் செய்திடுவோரிந்தநான்கும், நன்றேதுமில்லையிந்த சவுக்கா ரத்தைக் கூட்டிக்குள்ரசவாதிசுன்னஞ்செய்து, குன்றுதசரக்குகளை ப்பொதிந்துசுட்டுக் - குணமில்லாவகைகண்டு குறையாவாரோ (௰)

குறைபட்டுப்போகாம லிந்தநூலிற்- கூறுகிறேன் வழலையின் றன்குறிப்பைமைந்தா, நிறைவானரவிமதியு மங்கிமூன்று- நின்ற வகலண்டத்திற் பிரமவித்தாய், மறைவானமூன்றதினா லுலகமாச்சு வாயுவங்கியப்புமன்றே மகத்தாம்வித்தே, உறுகதிர் மூச்சுடரொடு த்ரிகர்த்தாவாகி - யோங்கிநின்றபிரமசித்தினுண்மைமன்றே (௰௧)

சாதிவெடியுப்பின்பிறப்பு,

உண்மையாமக்கினியினுறுகோபத்தா- லுற்றரவிமதியிரண்டுஞ்சையோகித்து, தண்மையாம்விந்துவெனுமழையுண்டாகித்-தா ணிமுதலெழுதோற்றசார்புண்டாகி, வண்மையா முறுபஞ்சேந்த் ரியங்களாகி-வந்ததாற்பிரமமெனுமாயக்கூத்து, வெண்மையாம்வி சும்பாலேவிடமுண்டாகி-மேகசலத்தாற்பிறந்த வெடியுப்பன்றே.

வெடியுப்புச்சுத்தாவிபீசமாச்சு- வெருட்டினா ரிதைத்தானே முடிவாமென்றே, இடியுப்போவிருந்தவிடஞ் சொல்லாமற்று-னி னைங்கணுப்பைச்சிவமென்றேயிசைந்தேசொன்னார், அடியுப்புநில வுப்பென்றறியமாட்டா - ரடுத்தவுப்பைச்சிவமென்றே யறியமா ட்டார், குடியுப்புப்பாறையுப்பென் றறியமாட்டார் - கோடாண கோடியுப்புக் கூறுவாரோ ... ... ... (௰௩)

கூறுவார்முதல்வழலை நிலவுப்பாச்சு- குறித்தறியவேண்டுமெ னிற்பூமிநாதம், மாறுவார்காச்சுவார்வழலைசெய்வார் - மதியுப்புப் பிண்டமென்பா ராயினாதம், தேறுவாரிவர்தாமே சிவமாமென்று- செப்பிரிந்தாமரியாக்காற் றிறந்துசொல்வேன், பேறுபெறநிலவு ப்பேபூநீரென்று-பேரிட்டவகைபிரித்துப்பேசுவேனே... (௰௪)

நிலவுப்பு.

பேசுவேன்பூவென்ப தயனுமாச்சு - பெரிதானநீரென்ப த றைமாலாச்சு, வீசுகிறேன்மாறுமேனயீசனானான் - வேதமெனும்பி ரமனே சத்தியானான், ஊசாரத்துக்கடுத்திருந்தவுப்பேயீச- னுப்பு க்குமேலிருந்த மண்ணேசத்தி, தாசியர்க்குமன்னன்றே வளைய லாச்சு- சத்தியைவிட்டகன்றவுப்புத் தானேபோச்சே ... (௰௫)

போச்சப்பாவீசனுப்புத் தண்ணீராச்சு- பூத்தசுன்னஞ்சத்தி யன்றே மண்ணேயாச்சு, தேச்சப்பாவிழிகுலத்திற்பிறந்தவீச-னி தனாலேசத்திக்குளடக்கமானான், வாச்சதப்பாகாறலையாய்த்தலையே காலாய்-மாறிநின்றபடியாமேலமறைத்தார்நூலில், பேச்சப்பாநாத மென்றுமடியாமென்றும்-பிண்டவுவீர்சத்தியென்றும்பேசினாரோ.

பேசாதபூவழலை பிரமகற்பம் - பின்னையொன்றுயில்லைநில
வுப்பேயீசன், கூசாமேதமுடிதலையெல் றிதற்குப்பேராங்- கொண்
டன்மதியுப்பென்றுங் கூறலாகும், பூசாரமறியாக்காலீசனுப்புப்-
பொருந்தாது முதல்வழலை பொய்யாப்போகும், ஆசாரிக்கள்ள
ருக்கப்பேசவேண்டா- மாதித்தனுப்பையுனக் கறையக்கேளே-()

ரவியுப்பு,

அறையக்கேள்பொட்டிலுப்பு வெடியுப்பையா - வராகராக
டைசியென்ற வழலையாகும், பறியக்கேண்மண்ணெடுத்துச் சலத்
தால்மூட்டிப்-பசுவத்திலுற்பிறக்குங்கம்பியுப்பே,யுறையச்செந்
திக்கண்டாற் பிஷத்துவெற்தே - யொடிந்தக்காற் சிவமென்று மூ
ணைப்பாராயா, முறையாக்கேளீசனுக்கு மாணமூண்டே-மோச
மூண்டோவிணங்கள்லெகு மூர்க்கனுமே ... (௰௮)

மூர்க்கமுள்ளரவிவிந்து மதியின்விந்து-மூன்றுபங்குயிரண்
டுபங்குமாகக்கூட்டித், தீர்க்கமாயிணங்கியெனும் பெயருமீச்சு-
சிவசிவாவெண்ணெய்குடித்திருக்குமுப்பு, மார்க்கமா யக்கினிக்கு
ரோமம்போல- மாமிசத்தின் கருவைவிட்டான் மாளாதுப்புப்,
பார்க்கவேகானுக்கு முடியென்றேபேர் - பரிதிவிந்து மதிவிந்து
பாரொன்றுச்சே ... ... ... ... ... (௰௯)

பாஷையுப்பு.

பாரப்பாநில்வுப்பு வெடியுப்புக்குப் - பாடையென்னவொ
ன்றல்லா விரண்டுமுண்டே, நேரப்பாவடியென்று முடிதானெ
ன்று- நிறைநிறையாய்ச்சொன்னதினுற் பலனேதுண்டு, கூரப்பா
வடுப்பிலிட் டெரியுந்தீயிற்- கொள்ளியிலேசுடர்க்கொள்ளி குறுக்
கேயுண்டோ, சீரப்பாமுன்பின்னுச் சொல்லுநூல்க - டிரிவிதமா
மூப்பினதுதீர்க்கந்தானே ... ... ... (௨௰)

தீர்க்கமாய் வெடியுப்பே சிவனுப்பாகுஞ்- சிலநாளிற் சித்தி
யென்றுசெப்பலாகும், மார்க்கமாய்ச் சொன்னதல்லா லுப்பின்
மார்க்கம்- வகையறுத்துச்சொல்லாத வகையேதென்றால், மூர்க்க
முள்ளசித்தரெல்மேற் கோபஞ்செய்வார் - மூடிவைத்தேனிதனு
லேமுன்பின்னுகப். பார்க்கின்றபிள்ளையறி வுடையனுற்- பதமு
மனுன்மூழுதும்பார்ப்பன்றனே ... .. ... (௨௧)

தானுனபாஷையுப்பைச் சொல்லவென்றுற் - சமுத்திரத்திற்
பாறையிலேதானுண்டாகும், வானுனகல்லுப்பென் றிதற்குப்பே
ராம் -.வாரியென்றுமப்பென்று மதற்குப்பேராம், தேனுனசிவக
ன்னி யென்றும்பேராஞ் - செய்பரியகங்கையென்றுமதற்குப்பே
ராம், ஊனுனதிராபோக மென்றும்பேரா- முத்தியிலேபாறையி
னில் வளரும்பாரே ... ... ... ... (௨௨)

வளருகின்றவுகாரவுப்புச் சிறநீருப்பு - [வகாரவுப்புத்திரையி
னுப்புத்தவுப்பைய, துளிரானசுத்தசலதீட்சையுப்புத்- தொழின்
முடிக்குஞ்சினவுப்புச் சத்தியுப்புத், தெளிவானகடன்மதிக்சத் திர
ண்டவுப்புச்- செய்யவதிமதுரவுப்புச் செந்தியுப்புக்,களியாதகளி
யுப்புக் கரியினுப்புக்- கண்டுபோராதித்தல் கட்டுமுப்பே... (௨௩)

கட்டுகின்றவங்கியுப் பீசனெல்றுங்- காட்டினூர் முடியுப்புக்
காணுரென்றும், விட்டசுழியகாரமென்று மையாலவயா - மேனி
விந்துநாதமதை வினவலாமோ, பொட்டலென்ற வூசரத்துக்குள்
ளேயீசன் - புதையுண்டுபோனுனேசமாதியாக, ஒட்டுகின்றசிவச
த்தி யிரண்டுபேரு- மோரிடத்திற்குடியிருந்தா ருற்றுப்பாரோ ()

உற்றுப்பார்சிவமிருந்தபூமிதன்னி-லொருபூண்டுமுளையாதே
யுவருப்பாலே, அற்றுப்போமருதநில மயானருத்திர - னவனுடை
னசத்தியடுத் திருந்ததாலே, மூத்துப்போற் கொஞ்சம் விஞ்சச்
சலமுண்டாச்சு முழுமோசமில்லாமற் பசுமையாச்சு, சித்திக்கும்
பசந்தமண்ணுந் தண்ணீர்கண்டாற்- சிவனுப்புநிலமுவராந் தெளி
ந்துபாரோ ... ... ... ... (௨௫)

பாரப்பாவீசனுப்பைக் காணவென்றாற்- பனிக்காலங்குடிவீ
விட்டுப் பார்க்கவேண்டும், ஊரப்பாவெளுகின்ற வண்ணானுப்பா
லொருமுழமோவிருமுழமோ வுயரந்தானே, வாரப்பாபக்கமேர்
பூமியுள்ளோ - மாலையுச்சிகாலையோமதியோவெய்யோ, ஆரப்பா
வாகாசவுப்பைக்காண்பா - ரானுலுமுசரத்தை யடுத்துக்காணே()

அடுத்துக்காண்மாசிபங் குனியின்மட்டு - மமாவாசைமுன்
னேடும்பின்னும்பாராய், தொடுத்துப்பார்நிலவுப்புக் கதிராய்ப்
பூத்துத்-தோன்றுகின்றநாடனிலே மழையுமாகா, தெடுத்துப்பார்
குளிச்சிகொண் டெழுமப்பூவி - லில்லறத்திலீசன்விந்தைச் சை
யோகித்து, வடித்தவுவர்சத்திகவ ளீகரித்து - வந்ததுநன்னிலவுப்
பின் மகிமைதானே ... ... ... (௨௭)

மகிமையாமுசரமுமீசனுப்பை-வாங்குமுன்னே யதிகமாஞ்
சையோகத்தால், பகையானசத்திக்கு மிரவிமுத்திரை - பாடிநா
நாதிசெய்யப் படிகமுன்றி, யுகமுடிவுநமக்கென்ற வீசனுப்பை
யுட்கொள்ளமாட்டாமே பூசுநந்தான், வகையானமஞ்சணின்றவன்
னமெல்லாம்- வருஞ்சுத்தவெண்மைநிறம் வாங்கிப்போமே... ()

வாங்கிப்போமுசரத்தில்வெண்மையில்லை மஞ்சளுக்குச்சிவக்
கின்றமார்க்கமில்லை, எங்குகின்றதீயிடலிக் கறுத்துப்போகு-மிந்த
வகைவாதிகள்கண் டெடுக்கமாட்டார். நீங்கிப்போகாதபடி யீசன்
விந்தை-நிலவுப்பைக்கிருகித்து நிற்கும்பூநீர்,பாங்கிக்காவலையல்செ
ய்வோனுப்புவேருய்ப்- பண்ணுவோனந்தவுப்புப்பாழதாமே ()

பாழென்றுசொன்னதென்ன புலத்தியாகேள் - பரமசிவனு ப்புமங்கே கைத்திடாது, வாமனென்றசுண்ணாம்புகார[illegible]ன் னன்றேநிலவுப்பின் மருவிக்கொள்ளும், கோனென்ற சலமேவி வாருலைக்குள்வைப்பார்- கொடுங்காரந்தானடங்கிக்கொடிய கைப் பாம், தானென்றவுப்பையெடுத் தொன்றுமில்லை- தண்ணீரில்மண் கலந்தாற் றாழ்வுதானே ... ... ... (௩௰)

தாழ்வில்லாப்பூநீராச் சுன்னமென்று- சாற்றுவார்தழைகளி லேதானேபூட்டி, வாழ்வுபெறச்சலமெடுத்து வேதைபார்ப்பார்- மைந்தனேயதினாலேவன்னமில்லை, தாழ்விலாச்சத்தியுவர்சாரத்தெ ண்ணெய்- தான்கலந்துசிவசுன்னந் தணிந்துபோச்சு,நாளிலேசிவ வுப்பைச்சத்தியுண்டு- நாரிமருந்தேபெரிதாய்நடப்புமாச்சே ()

நடப்பானசத்தியெனுஞ் சாரம்விஞ்சி- நற்சிவனாற் காரமன் றேநாட்டமாச்சு, தடிப்பானகாரத்தைப்புண்டசாரந்- தன்குணமு மாறியன்றேதவறிப்போச்சு, அடைப்பான்கானகத்திற் புலியுங்க ண்டே - யப்புலியாற்கானகமுமழிந்தாற்போல, உடற்போனாலு யிர்நிலையா வாறுபோல- வேகோகோகாரசா ரங்கள்போச்சே ()

போச்சென்றுமலையாதே சத்திசாரம்- புட்பிக்கு நாளையிலே பூண்டுபாரு, வாய்ச்சுதென்றுகடனீராக்கவிழ்ந்துமேகம்- வாங்கு கின்றதன்மைபோல் வாங்கும்பூநீர், நீச்சென்னுஞ் சிவனுப்பைச் சத்தியுப்பை- நினைவாகவெவ்வேறாய்ப்பிரித்துவாங்கி, ஆச்சென்ற யந்தவகை யுபாயமெல்லா- மைஞ்சாங்காண்டத்துளாப்பே னறி ந்துகொள்ளே ... ... ... (௩௩)

கொள்ளப்பா கடைசியஞ்சாங் காண்டத்துள்ளே - கோள் ஒழிதுமில்லாமற் பிரித்துரைத்தேன், எள்ளற்கதவறுமல் சொல்வி னேனு- லீசனுப்பையெடுக்கின்ற வியல்பையெல்லாம், தள்ளற்க நான்சொன்ன படியேநீயுஞ்- சாதித்துக்கற்சுன்னத் தொழிலைப் பாரு, கொள்ளற்கமற்றவெல்லா முப்பேயல்ல-கூறுகின்ற மதிவெ ண்பா நூறும்பாரே ... ... ... (௩௪)

## கல்லுப்பறிதல்.

தாருனவுரோமருஷி யைந்நூறும்பார் - நுணுக்கமதிலறிய வென்று விந்நூல்பாராய், சாறுனமுப்பதிலேகைபாகங்கள்- சவு மியமாஞ்சாகரத்திற் காலைப்பாராய், பேருனவின்னுமற்ற நூல்க ளெல்லாம்- பேசாதுகருக்குருவும்பிடித்துநன்றாய்த், தேறுதுசிவ வுப்புத்திறந்திடாது- செய்பாகங்கைபாகஞ்செப்பிடாதே...(௩௫)

செப்பினேனுப்பினுட் செய்கையெல்லாஞ் - சிவவுப்பே முதலைஞ்சுஞ் சோச்சொன்னேன், உப்பெல்லாம்வழலையென்றுசி த்தர்சொன்னு- ரோகோகோர்நிலவுப்புத் தானுமொன்று, தப்பில்

லாக்கல்லுப்புத் தானுமொன்று - சாரமெனும்பூரமாம் வெடியுப் பெட்டுடே, அப்பனேயிவைகளெல்லாமாதியுப்பா- மவையுடனே சிவவுப்பா மதுவுமொன்றே ... ... .. ... ... ...(கூகூ)

அதுவென்னசிவசுன்ன மாகாசத்தை - யடக்கினுெமெப்பதற் கரிதாமென்று, யிதியுடனே சொன்னக்கா லெடுத்திடாரோ - மேதி னியிற்சித்துவித் தாரமென்றே, உதவிசெய்வார்தங்களைப்போ னு லுண்டாக்கி-யொளித்திட்டாரொன்றான வுப்பைத்தானே ...(கூஎ)

ஒன்றானவுப்பென்று தீட்சையொன்றென் - ெருளித்தாரே பரிபாடைக் குட்புதைத்தே-எண்ணாயிரத்திரட்டி திருமந்த்ரத்தை யிருநூறுத்திருமூலர் பாடிவைத்தார், வண்ணான்று னுப்பைவெளி யாகச்சொன்னான்- மறுவிலொருதிராமறவா யுரைத்தார்சித்தர், க ண்ணாம்பைச்சுத்திசெய்ய நீருஞ்சொன்னார் - சத்தவுப்பையெடுக் கும்வகை சொல்லிடாதே ... ... ... ... ... ... (கூஅ)

சொல்சட்டைமுனிவரிரு நூற்றிற்றீட்சை- தோன்றுமென்று கிழித்தாரே தோடந்தோடம், வல்லவராற்றீட்சைகிழி பட்டபோ தே - மற்றவர்கள் சொல்வதற்கு வாயுண்டாமோ, சொல்லும்மகா வாக்கியந்தான் கொங்கணன்றான்-செப்புகின்றநூலெல்லாமூப்பே யென்றால், வெல்லரிதுநந்திதிகண் டொருமூந் நூற்றில்- லெருட்டி னார்மிகச்சற்றுமின்னினாரே ... ... ... ... ... ...(கூகூ)

பின்னினார்மச்சமுனி நூன்மறைப்பு- வெட்டவெளிசவுக்கார மென்றேசொன்னார், தன்னிமைபோற்போகருமே காரசாரந்-தா னென்றேபேசினார் தப்பில்லாமல், கன்னன்மொழிச் சிறுபிள்ளைச் சுந்தரர்தாம் - கலிச்சுன்னமென்றுசொல்லிக் காட்டிவைத்தார், பி ன்னுமற்றசித்தரெலாம் வழலையென்று - பேசினார் பரிபாடைப் பேதத்தானே ... ... ... ... ... ... .. ... (சய)

பேதத்தைக்காண்பதென்றே கற்சுண்ணாம்பைப் - பெரியசு த்துவாங்கிமுன்னே பிரிப்பதென்றே, தாதுற்றமதிசாரந்தன்னிற் றாக்கிச்-சமுத்திரமாஞ்சிவகங்கை சார்வதென்றே, சூதத்தைமணி யாக்கி யேமபீசஞ்-சூட்டியொருகுருவாக்கித் தோமில்லைம்பொ ன், வாதத்தைக்காண்பதென்றே - காயசித்திவாகாகச்செய்வதென் வயசுநூரோ ... ... ... ... ... ... ... ... ...(சக)

நூறானவயசதிலே யைம்பதாண்டு - தூக்கமில்லா நித்திரை க்கு ளொடுங்கிப்போகும், கூறானபாலர்முதற் பதினாறண்டு-கொ ள்வார்க்கறிவுதறிவில்லாப் பருவமாகும், நேரானமுப்பத்துநான்கா மாண்டு-நிறைந்தவர்க்குச்சுகதுக்கநினைப்போகோடி, பேறானவிதி லெத்தநூலைப்பார்ப்பீர்-பேய்மக்காள்ஞானகுருபின்செல்வீரே·

பின்சென்றுநிழல்போலத் தொடர்ந்துகாத்துப் - பே[illegible]தமவுனரகசியத்தைக்கேளும், முன்சொன்ன வழலையுப்பை[illegible]க்கே கேளு-மூலவிந்துவாசியின்றன் முடிவைக்கேளும், தன்செயல்விட்டுஞ்செயலிற் றனித்துநில்லுஞ் -சாத்திரமாங்குப்பை[illegible]ளைத் தள்ளிப்போடும், என்சொல்லுமைந்தாஅ மிணங்கிப்பாரு - மிணக்கமறிந்திணங்கியிரு மிகத்திற்றானே ... ... ... .. ...(௪௩)

இகத்திலுற்ற முடியுப்பையெடுக்குமார்க்க - மெள்ளனவுஞ் சொல்லாமற் சித்தரெல்லாம், மகத்துவமாம்வழலைநில வுட்பேயென்று - வழுத்தினார்சவுக்கார வைப்புமார்க்கம், சுகமதாச்சிவசுன்னநிலவுப்புக்குட் - போற்றுமதனாலதனைச்சுத்தியாக்கப், பகுத்தசிப்பியண்டநீர்தேசிபூசி-பலபல்வாஞ்செயநீரிற்பாடந்தானே (௪௪)

பாடமென்னப்புடமெரிப்புச் சுண்ணாம்புக்கல்-பாய்ச்சியேநீர்விடுதல்சுடரில்வாட்டல், ஈடமென்னவிதனாலேசவுக்காரத்தி-லெண்ணெய்கக்கும்படிமுடித்தெடுப்பார்சுன்னம், நாடுகின்றசுன்னத்தானுப்பைக்கட்டி-நன்றானதாளகநல் வங்கங்கட்டி, ஆடுகின்றபடிசேர்த்துச்சிந்தூரித்தே-யாறேழெட்டொன்பதுமாற்றுவாரோ

மாற்றாகுமிந்தமட்டுங் காணவென்றால் - வழலையுப்புநிசமாகவைத்தானுண்டு, காற்றானவழலைசவுக் காரந்தன்னைக் - கந்தல்கந்தலாப்பிரித்துக் கசடர்ச்சொன்னார், கூற்றானமன்னனுக்குந் தண்ணீருக்குங் - குடித்தவெண்ணெய் கக்காமற் குளிர்ச்சியீந்தார், பார்த்தாவதொன்றுமில்லை வண்ணானுக்குப் - பழஞ்சீலை வெளுப்பதற்காப் படித்திட்டாரோ ... ... .. ... ... ... ... (௪௫)

பாங்கிசவுக்காரம்.

படித்திட்டவுலகத்தார் மகாசினத்தார் - பரங்கிசெய்தசவுக்காரம் பண்பன்றாமால், தடித்திட்டநிலவுப்பைக்குறுக்கிப்போட்டான்-சாரமதில்வெடியுப்பைத் தள்ளிப்போட்டான், வெடித்திட்டகல்லுப்பைக் குளிரப்போட்டான்-வீணானசுற்சுண்ணமிகவும்போட்டான், எடுத்திட்ட வெண்ணெய்தனை மிதக்கவிட்டா - னென்ன சொல்வேனுன்னுடைமிக வெடுப்பாச்செய்தான், மடித்திட்டபுத்தியினான் மயங்கிப்போனான்-மாறாட்டமாச்சுதிந்த வழலைதானே. ()

வழலைமுறை வரிசையாய்ச் செய்தானுந்தான் - மக்களேதங்கம்விட்டால் வன்னமில்லை, விளைவென்று சொன்னதென்ன வாகாசித்தின் - விந்தென்ற வீசனுப்பை விட்டதாலே, தொழின்முறையாய்முடித்துவைத்த வழலையைமா - சொர்ன்னமல்லாற்சொர்ன்னமுண்டு சுயம்பேயானால், பழமென்றரசனையடா வீசன்விந்து-பட்டவிடந்தொட்டவிடம் பசும்பொன்னாமே ... ... (௪௮)

வுகும்பொன்னேமாற்றதிக மாணியில்லை - பருகினூழிகண் டபின்னுமே, விசும்பென்றவாகாச வுப்புப்போயின் - வெடியுப் புநீலவும்பும் வீணுமையா, நிசமாகச்சொல்லவில்லை சவுக்காரத்தி- னெடுநாளாய்நீருழைத் துநின்றாலும்மே, நசையிரசம்வேதையிட முடியாதையா-நல்லபுதியுங்களுக்கா நான்சொன்னேனே (௪௯)

நான்சொன்னேனென்றெண்ணி விடவேவெண்டா - நந்திச ருரோமருஷி யைந்நூறும்பார், வான்சேர்ந்தவுப்பெடுக்க வகை யைச்சொன்னான்- மறந்திகொண்டுமாய்வந்தா னென்னேயப்பில், தான்சொன்னபடிகுவிந்து நீதான்பார்த்தாற்- சான்வயிறுவவர்ப் பதல்லாற்றவங்கிட்டாது, என்சொன்னேனிவ்வளவும் புலத்தியா வல் - லியமனைக்கொன்றெந்நானுமிருக்கவன்றே......... ...(௫௰)

இருக்கவன்றேபிரமவித்துச் சிவமாஞ்சுன்ன - மெடுங்கவெ ன்றேபாடிவைத்தேன் கடைக்காண்டத்தில், குருக்களொருபுத்தியு னக் கிருக்குமாகிற்-கூற்றென்னுஞ்சமூசார வலைக்குட்பட்டுப்,பெ ருக்கிமாயுண்டுடுத்துச் சாதற்கேறு-பிரமையுனைத்தொடராமற்பெ சக்கேளு, தருக்கொளுயர்தாதுவன்ன வழலைப்போக்குத் - தனை யுரைப்பேனதையறிந்து நீசெய்வாயே ... ... ... ...(௫௧)

செய்யவேவழலைவிட்டோன்றாருசுகாணன்- செயமானதாரு சுவிட்டோன்பொன்னைக்காணன், மெய்யானவேமப்பால்விட்டா ணுல்-வீணுகுஞ்சூதமுதற் பாடாணங்கள், சையோகாசமிசயில் லாவேதை-சாதகமாவொன்றுமுத லைஞ்சுகாணும், கையாரப்புடத் தில்வைக்கப்புகைவதன்றிக்-காரியம்பேர்லதிலேகழன்றுபோமே.()

பூநீர்த்தீட்சை.

கழன்றுபோகாதபடி வழலைமார்க்கங் - காட்டுகிறேன்கற்சுண் ணம் படிதானென்று, தலைநந்தோங்கும்படிதல்ல வழூரியேட்டிற் றுணரைத்துக்கலக்கிவைப்பாய் தாழ்வில்லாமல்,குழைந்துபோகா தபடி தெளிவைவாங்கிக்-கொட்டப்பாதீட்சைசெய்த புட்பமெட் டும், மூழன்றுபோகாமலே கல்க்கிக்கொண்டே-யுத்தமனேசெயும் வகையை புரைக்கக்கேளே ... ... ... ... ... ... (௫௩)

கேளப்பாமேலான தீட்சையுப்புக்-கிரமமதாய்ப்படியிட்டுக் கிண்டிப்போடு, ஆளப்பாதீட்சையென்ன வென்பாயானா - லறை கடலினுப்பன்றோ வாயினுதம், தூளப்பாகடைவது பங்குனியின் மட்டுந்-தூரிதமாரவியில்வைக்க வுப்பேயாகும், ஆளப்பாவுப்பெ டுத்துக் கிழிப்பார்த்தே-யடியினடுவெடியுப்புமுடிமேல்வையே.()

வெடியுப்புத்தீட்சை.

மேலானமுடியிலிஞ்சு பலமேயூர்து - மிச்சமதாவடியிலே பலத்தானெட்டுக்,கோளான நவிணங்கன்படிதானென்று- கொட்

டப்பாசமாதியிலே யிட்டுமூடி, நூலானமேன்மூடி சீலேசெய் தூல் நூறெருவிற்புடம்போட நீற்றுப்போகும், மாலானவ... ரிட் டேயாட்டி-மகத்தானவில்லைசெய்து புடத்திற்போடே...... (ருரு)

புடம்போட்டேயாறினபி னெடுத்...க்கொண்டு - புதியவோ ரமூரியிலே கனாத்துக்காச்சித், திடம்பெற்றுக்கம்பியதாய்க் கட்டிப்போகுஞ் - செயவுப்பிலனைப்படிதான் றாக்கிக்கொண்டு, குடநிறைந்தவெண்ணெயோரனாயாமூக்கிற்-குழையவேகலக்கிறன்று வனைத்துக்கொண்டு, தலங்காட்டும்வேகாத வழலைநீனாத் - தான்காச்சிவிட்டிடுவாய் தாழ்வில்லாதே ... ... ... ... ... (ருசு)

இல்லாமற்போகாதே யெண்ணெயுப்பை - யெரித்துமெல்லக்காச்சிடவே யிருக்கும்பாராய், உல்லாசமாகவே யண்டம்போல-வுருட்டியேரவிழுகத்தி லுலரப்போடே, எல்லாருமிந்தமுறை பாடமாட்டா - ரிஃதன்றேவிசனுப்புக் கோச்சொன்னேன், வல்லவராமச்சர்கொங் கணர்தாஞ்சொன்ன- வழலையிந்தமுறையில்லை மகிழ்ந்துபாரே ... ... ... ... ... ... ... ... (ருஎ)

சவுக்காரம்.

ஆரவேநாற்கோண மடைவாய்போகிட் - டக்கோணத்தட்சர மிகடம்மிலைய, பூரணமா வீரிரண்டட் சரத்தைப்போடு - புகழ் பெரியவிந்துவிலேயங்கென்றான்று, நீரொன்ற நிர்க்குணத்தை நி ராமயத்தை - நேயமாயோகத்திற்பூசிப்பாய்நீ, வாரொன்றவாசியை நீயிழுத்துவாங்கி - வடகலையிற்பார்த்துமெல்லச்சாதிப்பாயே (௫௬)

சாதியாம்வாசியைநீ வரவழைத்துச் - சதகோடி யுகமளவும் யோகம்பாரு, எதிலரோவுனைவெல்லார் சித்தர்வெல்லா - ரென்மக னேசுந்தரமேயின்னங்கேளு, ஆதியிலேதீபதுபாதிதந்தே - யடை வாகவிலட்சமுரு செபித்தாமேலப், போதுதின்கண்ணெதிரே சா ற்றவொன்றுப் - புகழ்பெரியசோதியது காணுந்தானே ... (௫௭)

மணிபூரகம்.

தானேதானாற்கோண மன்றேசித்தி - தகைபெறுநா லெழுந் துகளு மடைவாச்சித்தி, சேனேதான்பரப்பிரம மவுநஞ்சித்தி - செ யமாகசரஸ்வதியும் பிரமன்றானும், மானேதான் கேட்டவெல்லாமீ வார்பாரு - மகத்தானபூரகத்தின் வண்மைகேளு, வானேதான் பூர கத்தின்மூலமையா - வண்மையதாவனாநடுவேவிறக்கேளே (௫௮)

கீறுவாய்மூக்கோண நடுவேசற்றுங் - கேடிலுயர் மகாரமோ டுகாரங்காணும், மீறுவாய் ஓங்காரம்ஸ்ரீங்காரந்தாம் - மிறிவாகச்சு ந்தரமேபிரித்துப்போடு, ஊறிலாதியோகத்தி லிருக்கும்போதே - யொட்டுவாய்சக்கரத்தை யொட்டிப்பாரு, மாறுவாயட்சரங்க ளமையறிந்தே - மகத்தானசக்கரத்தி லாடுவாயே ... ... (௫௯)

சக்கரத்திலாடுகின்றசத்திமீதஞ் - சாதுவாய்த்தவருமற் சார் த்திகேளு, அக்கரத்திலாடு மட்சரத்தைநாட்டே - யளவிறந்தவித் தையடாயார்தாஞ்சொல்வார், விக்ரத்திலாடுகின்ற மால்பூமாது

வேதாந்தபூரணத்தில் விளக்கங்காணும், சக்கரத்திலாடுகின்ற வாசி
பீடஞ்- சற்குருவின்கடாட்சத்தாற் சோதிப்பாயே... ... (௪௰)

சோதித்தாற்றெரியுமடா மவுநபீடஞ்- சொல்லரிய பூரணந்
தான்சொல்லப்போமோ, வாதித்தான்மவுநமாவாசிகொண்டு- மா
ட்டலாமிடைகலையின் வாசித்தம்பம், ஆதித்தனுதியடா வங்கென்
றான்றி- யாகாரவாசியைநீ யிழுத்துவாங்கு, சோதித்துக் கும்பித்
தோர் நிலையாதில்லு- சொலற்கரியசூரியன்போற்காணுவாயே ()

காணுமையாரவிகோடிமதியுங்காணுங்-காணரியவதிசயங்கள்
காணும்பாரு, மாணெழின்மாலிலக்குமியோடமர்பொற்பீடம்-வ
ழுத்தரியமாட்பெரிய மனக்கண்ணாலே, காணரியவர்கடரிசனத்
தைக்கண்டாற்- கழலுடநிறுவயதாவாயீது, வேணுமென்றியோ
கமதை யார்தாஞ்செய்வார்- வேணவாவற்றவனே யோகிமாதோ.

யோகிக்கேயாகுமன்றி மற்றோர்க்காகா - துலகத்தோர்க்கா
காது நிசமாச்சொன்னேன், போகிக்குமாகாது ஞானிக்காகும்-பு
கழ்பெரியமவுனிக்கு மகத்தாஞ்சித்தி, யோகிக்கேயாகும் பூரணத்
தின்மூலம்- யோகத்தைப்பூசித்துத்தெரிசிப்பாய்நீ, ஆகும்மாமற்
றவர்க்கிந்தமார்க்க- மடுக்கினவர்க்கிடுக்கண்வந் தெய்துங்காணே()

காணவேதிய துயாதிதந்தே - கண்மணியேயிலட்சமுறுசெ
பித்தாயாகில், வீணுகப்போகாதே யிராசியோர்க்கு - விண்டுதிரு
மாதுபிரசன்னமாவார், கோணவிலாத்தொட்டகுறையென்பதெ
ன்னே- கூறுதுலாராசியினோர்க் கெய்துஞ்சித்தி, ஆணுகட்பிறந்தா
லுமமைப்புவேண்டு-மநாகத்தின் மூலமதையறையக்கேளே (௪௪)

அநாகதம்.

அறையக்கேளநாகத்தின் மூலஞ்சொல்வே - னரறிவாரறு
கோணமாறுதாரம், அறைவரியவறுகோண முன்னேபோகிட்-டம்
பமேனமுக்கோணம்பரிவாப்போடு, நறவியவோர் நடுமூலத்தகா
ரம்போடு-நடுவிலுயர்சிகாரமோடுகாரம்போடு, மறவரறவடடக்
கம் திகாரம்போடு- மகத்தானவகாரமொடுகிலியுங் கூட்டே(௪௫)

கூட்டுவாயோகசிவ மவுநங்காணும் - கூறரியநாதவிந்து கெ
வுனயோகம், நாட்டுவாயுருத்திரசிவயோகவாசி நவிலுருத்ரபீசத்தி
னுனுக்கங்காணும், ஆட்டுவாயஞ்செழுத்துமுன்னேபோகிட்-டகா
கராவாசியைநீ சிங்கென்றான்று, பூட்டுவாய்கும்பித்துச் செபித்தா
யானாற்- புகழானவாசியது நிலைக்கும்பாரோ ... ... (௪௬)

நிலைக்குமது நடுவணையிற் சிகாரபீட - நிற்குணத்தில்வாயிலது
மூடும்பாரு, உலைக்குமஃதொன்பதாம்வாயில்மூடு-மோர்வாயின்
மூடாதேயுனாக்கக்கேளு, அலைக்குமப்பாவநாகத்தி னபானவாயு

வடுத்திருக்குமோர்வெயிலார்தாங்காண்பார், நிலைக்குமையாளான் க்கணதனைக்கொண்டு-நிலைத்துநீபார்த்தக்காற் றெரியும்பாரே (௪௯)

பாராய்நீநாதர்கடமாயைமாயை - பகருவாறென்றனுயிரத் தைப்பாரு, நேராகக்காவியபுராணன்சொல்லே - னிகழ்த்திடற் கரியவோ ளீஞ்சாங்காண்டம், தோராய்நீயோர்வாயில் கண்டே சொன்னேன் - றிகழொன்பதற்குமேற் பத்தாம்வாயில், ஓராய்நீ கொங்கணருங்கடைக்காண்டத்தி - லொளிக்காமற்சொல்லிவிட்டா ரறியலாமே ... ... ... ... ... ... ... ... (௫௦)

விசுத்தி.

அறியலாமநாகத்தின் மூலமார்ச்சு - தப்பாலே சொல்லுகி றேன் விசுத்திவீடு,அறியலாமதுகோணமடைவாக்கி - யவ்வறையி லகாரமொடு வகாரம்பேர்டு, மறுவிலோங்காரம் நீங்காரம்போடு மகத்தானசிவயநம வென்றேயோது, நெறியாகப் பத்தெழுத்து மூன்னேபோடு - நிகரிலாமயேச்சுரன்ற னேர்மைகேளே ... (௫௧)

நேர்மைகேணின்மலமா நின்றசோதி - நிகழ்த்தரியமயேச்சு ரன்ற னிறத்தின்மேலாஞ், சீர்மைமலிதேவதைக ளாத்துமாகுந் தெளிவாகவங்கென்றுசெபித்தேதைய, நேர்மையாவாசியைநீ யி ழுத்துவாங்கி - நிலைத்திருந்துகும்பித்து மவுநமாயின், ஆர்மையா மைந்துக்குன் மூலசித்தி - யாதாரமவுனசித்திகாணும்பாபா (௫௨)

பஞ்சபட்சி.

ஆதாரவாயிலது கண்டாயானு - லன்றன்றோபஞ்சபட்சியொ டுக்கங்காணும்,வேதாரவாயில்கடந்தப்பால்சென்றால் - வெளியான பரவெளியாம் விசுத்திவீடு, ஆதாரவாயிலது வாயுமீட - மங்கென் றுதானெழும்புமிறுக்கிக்கொள்ளு, சாதாரவாயிலென்றே யதற்கு நாமஞ் - சச்சிதாநந்தவெளி யொடுக்கமாமே ... ... (௫௩)

ஒடுக்கமாம்வாசிதனையிழுத்தேகாந்தத் - துகங்கோடியோகத் திலிருந்துதேறின்,அடுக்குமையவாசியம்பொழுதேசித்தி - யாதார யோகசித்திமவுநஞ்சித்தி, கெடுக்கரியகெவுனசித்திஞானசித்தி - கே சரத்தில்குளிகைசித்திவாதஞ்சித்தி, வடுப்படவில்வாதபித்த வைய ஞ்சித்தி - வாழலாமெனைப்போனீ வாழலாமே ... ... (௫௪)

ஆரவேசெந்நீர் தண்பனிநீருண்டா - லடைவாக வேறலாம் யோகமார்க்கம்,நேர வேதூபதீபாதியீந்தே - நேயமாப்பூசித்தான் முத்தியுண்டாம், சீரியமயேச்சுரனம் பிகைமாதோடு - தெரிசனந் தந்தருள்வர் விரத்தியக்கமாகித்,தோரியவிசுத்தியின்றன் மூலமாக் கு - செழித்திருக்கவின்னு மொருசெய்திகேளே ... ... (௫௫)

செறிதருசீர்விசுத்தியின் மூலஞ்சொன்னேன் - செம்மைமிகு சதாசிவத்தின் மூலங்கேளு, அறைவரியவைங்கோணமுக்கோண நீ தா உ மதினடுவின்முக்கோண மடைவாய்ப்போடு, முறையாகமூன் றெழுத்தை முக்கோணத்தின் - மொழிவரியசதாசிவத்தி னெழுத் தைப்போகிட், டுறுதியாஞ்சோடசத்தின் விந்துநாத- மோங்கஉங்அங் கிசாவென்றே... ... ... ... ... ... ... ...(ருச)

ஆக்கினை.

ஓதவே சதாசிவத்தின் சத்திநேர்மை-யோங்கார செயகம்ப மொன்றேகாணும், வாதமாவங்கென்றவாசிகொண்டு-வண்மையா க்கும்பித்து மவுனமானல், மோதுமேயலவந்து மோதினற்போ ன்-மூழங்குமிடியென்னவே மின்னல்காணும், பேசதவேபளாவா யி லங்கேதோன்றும்-புகலரியவாக்கினையின் பாகந்தானே...(ருரு)

பாகமென்றபாகமிதைப் போதுமுண்டோ-பரவரியசதாசி வத்தைச் சத்தியோடே, ஆகமகிழ்ந்துயர்தூப தீபந்தந்தே-யர்ச் சனைநைவேத்தியமுஞ் செய்துபோற்றி, மோகமறமனம்வாக்குக் காயமொன்ற-மொழிவரியவிலட்சமுருசெபித்தாயாகில்லகமுயர் சதாசிவனுஞ்சத்தியுங்கண்-ணெதிர்வந்து பிரத்தியக்கமாவர்தாமே.

தானேதானும்பரிபூ ரணமாலமைந்தா- சாற்றரியபளாவாயில சையாதோங்கு, வானேவானளவுகயி லாசவெற்பு- வளமேசபை யாங்கே கண்டுகொண்டு, தானேதானின்றநிலை யறியச்சொன்னே ன் - சதுராகவினையறிய வேண்டுமாயின், தாமேதான்றனக்குதிக ருலகில்யாருஞ்-சாற்றரியவிந்நூலை நூறுமாமே ... ...(ருஎ)

ஆமேதானுதார மார்தாங்காண்பா - லாயாயிரத்தைந்நூற்றி னைக்கண்டோர்கள்,ஏமேதானென்னூலைமுழுதும்பார்த்தோ-னெ ன்னைப்போலாயிடுவான் சரதமாக, வாமேதான்வாமமென்ற முப் பூசித்தி-மகத்தானமந்திரங்கள் செபங்கள்சித்தி, சேமேதாஞெரு மைமன தோர்டிருந்தாற்-செப்பரியசெகற்குருவை யறியலாமே.

அறியவண்டசத்தசா கரமுஞ்சொன்னே - னதிலிருந்தசுத்த சல மடைவாச்சொன்னேன், அறியவேயண்டத்திற்பிண்டஞ்சொ ன்னே-னறிவரியவாதத்தின் முப்பூச்சொன்னேன், மறுவிலாமச்ச முனி யெண்ணூற்றுக்குண் - மறைத்துவைத்தருமூலிவகையை ச்சொன்னேன், செறிதருமெய்ப் பொருளமைந்த விந்நூற்கண் ணே-செப்பரியசல்லிவேர் சாற்றினேனே... ... ... (ருகூ)

ச ல் லி வே ர்.

சாற்றியவோர் சல்லிவேர் மூப்பூவாச்சு - தாரணியோரறிய வெளி யிட்டேனையா, ஆற்றலுடையிவ்வோ வெல்லும்வெல்லு-

மருபத்துநான்குசித்து மிதனு லாடும், நாற்றிசையிலுளசித்தர்யா ருமிந்த நவிலரியசல்லிவே ரதனைச்சொல்லார், தேற்றமிகுபற்பி னியில்கல்லன்றேசிர்ச்-செகற்குரு தன்னாணைவிடக் கல்லாமன்றோ.

குருவண்டு - விடக்கல்லு.

ஆகுமிஃதின்னுமோர் செய்திமைந்தா - வண்டத்தின் குருவ ண்டை யறையக்கேளு, வாகுபற்பினியினிருபுறமூம்வண்டு-வண் மைமலிவிழியதுதான் சொட்டையார்த்து வேகமொடுகுளவிபுழு வெடுத்துச்சென்று - வியப்புறவேயதைக்குளவி யாக்கவந்தத்,தே கமொடுறப்புச்சாக்காடுதள்ளிச் - சேகுபெற்றப்புழுவுங் குளவி யாச்சே ... ... ... ... ... ... ... ... ...(௩௧)

ஆச்சுதையாவண்டவோ டண்டமாகு- மாகராநாதவிந்து கு ருவேயாகும், கூச்சமறவம்மூன்றுஞ் சேருமாறு - குருவண்டு நாபியென்று மதற்குப்பேராம்,பேச்சரியவிடக்கல்லு நாபியாகு ம்-பெருமைநிறைமூன்றுப்புமுப்பூவாகும், எச்சிலாவிதனைமறை த்திட்டார்சித்த-ரொன்றனைப்போல்வெளியிட்டுச்சொல்லாரன்றே.

நவசித்தர்வாக்கு.

சொல்லாதேயாயிரத்திலொருநூல்சொல்லுஞ்-சொன்னது மந்நூலை வெளிவிடார்கள், நல்லபயன் றருமெந்நூல் போலோர் நூலு-நானிலத்திலில்லை யிப்படியார்சொன்னார்,கல்வியறிவுடைய கருவூரார்சொன்னார் - கறையில் குணக்குதம்பைசித்த ரொன்னுநல் லோர்,அல்லலறக்கடல்புடை சூழுலகுள்ளோர்க - ளறிந்துய்யவரை ந்திட்டா ரருளினுமில் ... ... ... ... ... ... (௩௩)

அருளுடையவிடைக்காட ரநேகஞ்சொன்னு - ரறிவறிந்தவக ப்பைசித்த ரநேகஞ்சொன்னார், தெருளுடையதேரைய ரநேகஞ் சொன்னார்-தேவதத்தனென்றவர்க்குப்பொருளுமாச்சு,மருளிலா விராமனென் றவர்க்குப்பேரா - மருவறுசீர்ப்பின்பிறப்பி லிலட் சஞ்சொன்னார். இருளறுமிப்பிரட்பிலாயிரத்தோர்நூறு- மின்பமு டன்சொல்லிவிட்டா ரின்னுங்கேளே ... ... ... ... (௩௪)

பதினெண்பேர்.

கேளையாநூகியா யுகங்கள்கண்டு - கேதமிகுபிறப் பிறப்பை யொருங்கேதள்ளி, கேளையாவிக்கொடிய கலியுகத்திற் - கேடிலா வென்றனக்குச்சீடனானார், கோனிலாவவன்றனக்குளவாம்பேணாக் கூறவென்றான் முடிவுபெறு தனந்தமாமற், றூளையாவறிவுடையா ரிந்நூலாராய்ந் - தறிவிக்கமிக வெளிதிவ் வைத்தூறல்றே (௩௫)

அறைவரியதிருமூலர் சொன்னமார்க்க மையனே மாநிலத் தில் யாவர்காண்பார், குறைவருசீர்க்கோரக்கர் வெகுநூல்சொன்

ஞர்- கோதிலுயருரோமருஷி கருவாய்ச்சொன்ஞர், நிறைவுபெறு சட்டைமுனி தெளிவாச்சொன்ஞர் - நிமலசுந்தரர் சுருக்கமாகச் சொன்ஞர், பொறையாதிகுணமுடைய போகநாதர்- பூட்டியே வெகுமறைப்பாப் பாடிஞரே ... ... ... ... ... (ருசு)

பாடிஞர்கொங்கணரு மநேககோடி-பாரதனிலவையெல்லா மறைப்பாக்காணும்,சூடிஞர்சுருக்கமையா சொருபானந்தர்-சொல்லைமொழிவெகுவுரூம் யாருங்காஞர்,தேடியேகருக்குருமற் றுன்ளவெல்லாந்- தெரிந்துகொளவரிதாகமறைத்துச்சொன்ஞர், பாடிஞர்பதினெண்பேர் பாடிஞலும்-பாலகனேயிந்நூல்போல்வெளியிடாரே ... ... ... ... ... ... ... ... ...(ருஎ)

வெளியாகச்சொன்னவொருவேதாந்தத்தை - மிகத்தெளிவாமைந்தாங் காண்டத்திற்பாரு, தெளிவுடையசித்தருக்கிஃ தாயிராமைய-செப்பினேனிதையறிந் தடக்கம்பண்ணே,அளியோடேகருக்குருமற் றனைத்துஞ்சேரா- வறைதருநாலாங்காண்டமுழுதும்பாருகளியோடுகுருமொழிபாவைத்திந்நூலைக்-கண்டுதெளிகுருமுறைகடம்மையன்றே ... ... ... ... ... ... ... ...(ருஅ)

ஐந்நூற்றிற்சொன்னபடிசெய்தாயாஞ- லப்பனேவாசியதுபுரளாதென்றும், ஐந்நூற்றிஞன்சொன்னபடியார்செய்வா-ராயித்திவ்வாதவித்தை யார்தாஞ்செய்வார், ஐந்நூற்றிற்கருக்கண்டு செய்யவல்லார்க்- காகாதபொருளுண்டோ வடைவாப்பாரு, கைந்நெல்லிக்கனிபோன்முப் பதனிற்சொன்ன- கருத்தெவர்களறிவர்களறிவர்யுகங் கலியாமன்றே ... ... ... ... ... ...(ருக)

கருதரியசித்தர்தம நிலையைச்சொன்னேன்-கணக்காகவாதாரமாறுஞ்சொன்னேன், மருவரியமவுநசிவ யோகஞ்சொன்னேன்-மகத்தானவாசிநிலை யொடுக்கஞ்சொன்னேன், அருவானபஞ்சகர்த்தரவையுஞ்சொன்னே - னறிவரியபட்சாத்தி னிலையைச்சொன்னேன், அருசிலாத்துருவத்தின் மேருஞ்சொன்னேன் - றுலாராசியடுத்தவர்க்கே பலிக்குமன்றோ ... ... ... ... ... (எ0)

முப்பமண்டலம்.

அடுத்தக்காலாதார மாறுமாகு- மறுமுகவனருளிஞற்றெளிவுண்டாகும்,மடுத்தக்காண்மண்டலங்கண் மூன்றுங்கேளு-மகத்தானவென்றன்வாக் கமுதவாக்கே, கடுத்தக்காற்கொடியநம னணுகானையா - காசினியினீயுமொருகுருவாவாய்காண், படுத்தக்கார் பரமண்டலத்தின்சோதி - பார்த்தக்காற் றெரியுமது சொல்லக்கேளே.

சூரியமண்டலம் - சந்திரமண்டலம்.

சொல்லக்கேள்பரமண்ட லத்தைத்தாண்டிச் - சொற்பெரியவாசியை நீதம்பித்தக்கால், அல்லகற்றுமாதித்தமண்டலந்தா-னதிஞ

ளேயகாரமோ வோரமிடம், சொல்ரியகதிரிரவிகோடாகோடி சோதிகலாநிதிகோடிகாணும்பாரு, அல்லலறவாசிலைய்தீ யெழுத்துப் பார்த்தா- லப்பொழுதுந்தகம்வினக் கொளிபோலாமே ...(௭௩)

ஒளிபெருகு சூரியமண்டலத்தைத்தாண்டி- யுற்றுப்பார்த்தி டின்ஞானக்கண்ணிறுலே, நளிர்பெருகுசந்திரமண்டலமுங்காணு நானிலத்திலெவர்சொல்ல வல்லாரைய,ஒளிர்கிரணநிறையிரவிகோ டிகாணு- முனைப்பரியசந்திர மண்டலத்திலாங்கே, குளிர்ச்சிமிகு சோதிமின்னல்போலக்காணும்- கூறரியவம்பிறைம்பு வீடுமாமே.

வீடானமவுநமையா வங்கென்றான்றி- விளங்கவேசெபித்து நீரும்பித்தக்கால், கோடானகோடிரவியொளியேகாணும்- குருவி ருந்தாரவர்பெருமையென்னசொல்வேன், வேடாறுலொருவரால் வெல்லப்போமோ- வேதாந்தசொரூபநிலைகாணப்போமோ, ஆ டானவாணவங்க ளற்றுப்போகு - லப்பொழுதே மாயையெலா மகன்றுபோமே ... ... ... ... ... ... ... (௭௪)

போச்சப்பாபிறப்பிறப்பு மாண்டுபோகும் புகழுடையவ தனம்போன் மேனியாகும், வாய்ச்சுதுபார்வாசியது நிலைத்துப் போகும்- மகத்தானகாயமது பெலத்துப்போகும், கூச்சமுமே றூர்க்குணநற் குணங்களாகும்- கோடானகோடியுகம் வாழலாகும் ஆச்சுதுபார்வாமத்தால் யோகமாகு- மவையன்றியொன்றுமில்லை காயம்பாழே ... ... ... ... ... ... ... ... (௭௫)

காயமாம்ஒங்காரமூலாதாரங்- கண்டுநமசிவாயமந்திரமுமா ச்சு, மேயமூலத்தி னகாரமொடுகார-மேலானமகாரமதுமூன்றே மூலம், நாயகமாமொன்பதிலே பஞ்சகர்த்தர் - நலமானவான் மாவுமுயிரோயாகும், ஒயமாமோமென்றுசெபித்தாயாகு- லுகங் கோடிகாயமது பெலத்துப்போமே ... ... ... ... (௭௬)

பூரணஏகாட்சரம்.

பெலத்துப்போம்பூரணத்தைச்சொல்லக்கேளு - பேரான சூக்குமத்தைப் புகலுகின்றேன். அழுத்துப்போம் அகாரமோடுகா ரமீச- மதினடுவே ஒங்காரமடைவாப்போடு, வதுத்துப்போமதி நடுவே மகாரம்போடு- மகாரத்தினடுவேதா னகாரவட்டம், ஒலித் தேஉம்மென்று நீங்காரம்போகிட்- டோங்காரவட்டத்திற் சூலம் போடே ... ... ... ... ... ... ... .. ... (௭௭)

வட்டமாயிருபக்கஞ் சிங்குவங்கு-வகையாகவிருபுறமுமடை வாப்போடே, அட்டமாசித்திகளின் சூட்சாசூட்ச- மண்டரண்ட பகிரண்டமிதற்கொவ்வாதே,சட்டமாஞ்சங்கமென்றஅகாரமாச்சு சதகோடிமந்திரமு மிதுவேயாச்சு, திட்டமாவெட்டெழுத்து மி துவேயாச்சு- தெட்டெழுத்தாமிதற்குள்ளே யொடுக்கமாச்சே ()

### அட்சரபலிதம்.

ஆச்சுதுபார்மவுனசிவ யோகதீட்சை- யண்டசராசரங்க ளெல்லாமடங்கிப்போச்சு, பாய்ச்சுதுபார் பராபரமா மவுநதீட்சை- பாடினேனே பூரணகாவியத்தைப்பாரு, ஏச்சிலாவெவ்பாடன் மவுநஞான- மெய்துவிக்குமறவாதேயின் னுங்கேளு, வாய்ச்சுதுபார் கருவிகரணாதியான-கருவிருந்ததலங்களைநீ கண்டுகொள்ளே (௭௯)

கொள்ளையாவட்டகன்ம மாடவென்றாற்- கோசமாமிவ்வெழுத்தைக் குணமாப்போடு, அள்ளையாவஞ்செழுத்தாற் றியானம்பண்ணே- யதற்குநிகரில்லையெல்லா மூனக்குச்சித்தி, வள்ளைமிக்க வாசிவழு வாதுபாரு- மகத்தானபெரியோர்கள் சொல்லாரையா, விள்ளரியவேதாந்திக் கித்நூல்வேண்டும்- விவேகமில்லா மானிடருக்குதவாதன்றே ... ... ... ... ... ... ... (௮௰)

### நின்மலதெரிசனம்.

உறவாகநிர்க்குணத்தை யொட்டிப்பார்த்தே, ஞேரிடத்திற் சோதிமின்ன லடைவாய்க்கண்டேன், பொறையோடு பூசித்துத் தெரிசித்தேன்வண் - புகழ்மலிந்தவதுகடந் தப்பாற்சென்றேன், முறையாகநின்மலத்தைப் பார்க்கவென்றான்-முடியாதென்றெண்ணிமெய்ஞ் ஞானக்கண்ணி, னெறியாகநின்மலமாஞ்சோதிகண்டு- நேசித்துப்பூசித்துத் தெரிசித்தேனே ... ... ... ... (௮௧)

தெரிசித்தேன்குளிகைகொண் டேறிப்பார்த்தேன்- சிவசிவா பூரணத்தூத யறிவாற்கண்டேன், பரிசுத்ததலமென்ற பதியுங்கண்டேன்- பாலமுதமதனப்பா லமுதுகொண்டேன், அருச்சித்தேனகண்டமென்ற பிண்டமையா - வமுதநதிதெரிசனத்தாள் மோக்கம்பெற்றேன், தரிசித்தேபற்பநதிக் கப்பாற்சென்றேன் - றாவிலாருதார சபைகண்டேனே ... ... ... ... ... (௮௨)

சபையென்றாற்சபையதுவோவாருதாரஞ்-சதகோடி சித்தர்களுங் காண்பர்கொல்லோ, தபுதலிலாவறுமுகவன் கடாட்சத்தாலே- தரிசித்தேன்சிதம்பரத்தைத் தொண்டுசெய்தே, அபயமென்றேசிதம்பரத்தி லன்புளங்கொண்-டாயிரத்தெட்டிதழதனு லர்ச்சித்தனன், நிபுணராஞ்சபையாரைக் கண்டேயப்பா - னேராக வாசிகொண் டேறினேனே ... ... ... ... ... ...(௮௩)

### சித்தர்கள்தர்க்கம்.

நேராகவேறுகையிற் பொதியில்வாழு- நிமலகுண வகத்தீசர் வருகவென்றார், நீராகவாயிரவிற் சித்தர்கூடி- நிலையுடையேன்றனை மதித்துத் தர்க்கஞ்செய்தார், சீராகச்சித்தர்கடாநீயார்மைந்த-செப்புகவென்றேயென்னை வினவினார்கள், போராகவறுமுகவன் சீடனென்றே - போரண்டவாசிகொண்டேறினேனே ... ...(௮௪)

ஏறினேன்போண்டவாசிகொண்டேயேறுகையிலாயிரம்பே ர்சித்தர்கூடி,மாறினேன்றவே வெளியிலடக்கிக்கொண்டு-மகத்தான போர்செய்தா ரநேகம்பேர்கள், மீறினேனைத்தூற்றி னனுபவத் தை-மீதண்டவண்ட த்திலேறும்போதங்,காறினனவருடனேதர்க் கஞ்செய்தே- யண்டரண்டங்கடந்தப்பாற் பாய்ந்தேன் மன்னே.

அண்டரண்ட நவகண்டம்.

பாய்ந்தண்டாண்டமதைக் கடந்தப்பாலே- பரிவாகநவகண் டமேறும்போது, தோய்ந்தசீர்க் கொங்கணவன் றன்மாணாக்கன்- றுகளிலாவைந்நூறு பேர்களோடே,ஆய்ந்தென்னைச் சேர்க்கவைந் நூறுபேரு- மடைவாகவினுவியநல் வினக்கட்கெல்லாம், வய்ந்த விடைகொடுத்தப்பாற் செல்லும்போதங்-கெய்தினர்குளிகைசித் தர் கோடிமாதோ ... ... ... ... ... ... ... (அகூ)

சதகோடிகுளிகை சித்தர்தர்க்கம்.

கோடியாஞ்சதகோடி குளிகைசித்தர்- கூட்டமா வென்னை மடக்கித்தர்க்கஞ்செய்தார், தேடியையாயிரத்தை யெடுத்துக்காட் டித்- தேயத்திலெய்தரிதா மவுனங்கொண்டேன் - கோடியாமலர் கனைத்தாமவுனமேகங் - கூறுமூகாந்தத்தெழுமோ ரிருள்போன் மூட, மூடியதையால்கடந் தப்பாற்சென்றே - மூன்கண்டுசிதம் பரத்தைத் தரிசித்தேனே ... ... ... ... ... ... (அஎ)

சிதம்பரமாங்கனகசபை யாறுங்கண்டேன்- தெளிவான புல த்தியனே மகிமையாரு, கதம்பரமாங்காவியத்திற் பஞ்சாகாவ்யங் கருக்குருநாலாங்காண்டங் கண்டுசொன்னேன், எதம்பரமாமென் னசொல்வே வினின்னுஞ்சோதி - யென்மகனே புலத்தியனே யின் பாக்கேளு, குதம்பரமாங் கோடான கோடிவித்தை- கூறுவேன் குருவருளாற் கூறுவேனே ... ... ... ... ... ... (அஅ)

பூஜைக்குறிப்பு.

கூறுகின்றேனுதார பூசைமார்க்கங்- குணமான வாயிரத்தின் மவுனபூசை, வீறுகின்றமவுனத்தில்யோகபூசை- விள்ளரியகெவுன சித்துங் குளிகைபூசை, மாறுகின்றவாசிசித்து ஞானபூசை-வளமா னவாதசித்து குருவின்பூசை, தேறுகின்றகாயாதி கற்பபூசை- தெ ளிந்தவர்க்குச்சிவபூசை தெரியும்பாரே ... ... ... (அகூ)

பாரையாமவுனத்தின்பூசைசொன்னேன் - பாலகனே யாதா ரபூசைசொன்னேன், தேரையாசிவயோகபூசைசொன்னேன்- சித ம்பரத்தின்பரபூசைதெளிவாச்சொன்னேன், சீரையாமெஞ்ஞான பூசைசொன்னேன் - செப்பரிய சற்குருதன் பூசைசொன்னேன், ஓரையாசிவபூசையடைவாச்சொன்னே - னுத்தமனேயான்செய் புத்தியானங்கேளே ... ... ... ... ... ... ... (கூ0)

உத்தமனேகேட்டிடுவாய் கருவாச்சொல்வே - னுரைப்பரிய பொருளையாந குருவாஞ்சூட்சம், சித்தானவரூபமையா சொரூப சித்தி செவ்வனளித்திடுமெய்வயாணேதோள்சேர், அத்தமீராறுடைய வையன்றியான - மவனேசற் குருவெனக்கா மறிநீயைய பத்தி மையாமூதண்டக்கருவைக்கேளு பகரரியவோங்காரபீடங்காணே.

காணுவாய்குருவருளா லதனையையா, காணரிதுகாணரிது க ண்டேன்யானும், எணமர்சிங்வங்அங்உங் மங்கென்றன்பா- விம்ம னுவையைநீ யோதுவாயே, மாணவேசுழுமுனையில் வாசிகொ ண்டு -மகத்தானமூக்கோணம் வுலமாவந்து,எணியாவிடைகலையில் வாசியோட்டி-யேறுவாய்துரியத்தின்மேலேமன்றோ ... (௬௨)

துரியத்தின்மேலேறிப் பாய்ந்தாயானாற்-றுகளில்பிரானுயா மந் துரியங்காணும், பிரியத்தோடடங்கென்று கும்பித்தக்காற்-பே சரியவொளிவட்டப் பிரபைகாணும், தெரிவரியவாதார மாறுங்கா ணுஞ்-செப்பரியசிதம்பரத்தில் பீடங்காணும், புரியத்துப்பூரண மாஞ் சோதிகாணும்-பூரணத்தின்மனக்கண்ணை யோட்டிப்பாரே.

ஓட்டிப்பார்பூரணத்தின் மேலாதார - மோகோகோதெரியு மறு சபையுமாங்கே, தாட்டிகமாவறிங்கென்று தம்பித்தக்காற்-சது கோடியுகமளவும் வாழலாமே, நாட்டம்பார் பளிச்சென்றுதலமு ங்காணு-நண்பாகப்பராபரத்தைப் பூசிப்பாயே, சோட்டமிலாதி யான்செய்யுந் தியானஞ்செய்தாற் -குணமுடையோ யொருநா ளுங் குறைவாரதே... ... ... ... ... ... ... ... (௬௪)

வருமினியபயனெல்லாந் தியானத்தாலே-வச்சிரம்போற்கா யமது பெலத்துப்போகும், தெருமரோவுடலதுவச்சிரம்போலா யிற் - றேசியென்றதற்கோர்பே ருளதாமற்றை, அரியசீரட்சரங்க ள்சித்தியாகு - மாதாரஞ்சித்தியடா யோகஞ்சித்தி,துருவமெனுந் துரியமொடு துரியாதீதந்-துகளிலாச்சித்தர்களே காணுமன்றே.()

### சாதி - தேயம்.

காணுமேகாணரிய துரியாதீதங் - காசினியிலாரறிவார்வழலை மார்க்கம், கோணலிலாக்கேசரத்தின்சாதிகேளு-கூறரியசாதிநான் காமவற்றுள், மாணெழில்சேரத்தினிவண்சோழதேயம்- வடிவேற் கட்சங்கினிசேர்ப் பாண்டிநாடாம், ஏனுயர்சித்தினிசேரனுநாந்தே ய-மென்மகனேபதுமினியொன் காசிமன்றே ... .... (௬௫)

### தேயவளப்பம்.

மன்னியவர்வாழ்தேயவளப்பந்தன்னை-வழுத்துகிறேன்புலத் தியனே யன்பாக்கேளு, பன்னரியசோழவள நாட்டின்வண்மை- பசும்பொன்போற் றுளிருக்கும் பாருபாரு, துன்னரியபாண்டி

வள நாட்டின்வண்மை சொல்லரிய பச்சைமேபோற் காணுமையா,
மின்னுமணி மூடிச்சேர ணுந்தேய - மேலான வெண்மைநிற
மாகுத்தானே ... ... ... ... ... ... ... ... (௯௭)

தாமையாநளிகடல்சூழவனிமீது - சாற்றுமொருகறுப்புவன்
னங் காசிநாடு, தாமெய்யாநூன்கின துறிறமுஞ்சொன்னோ- நாதர்
கடாமறிவர்மற் றவர்காண்பாரோ, காமையாகாசிவளநாட்டுப்பெ
ண்கள்-கற்புடையாரவரிலொரு நூறுபேர்கள், ஆமையாவவர்கடம
க்குள்ளேயெல்லா-மாய்ந்தெடுத்தோமாயிரத்திலொருத்தியாமே.

ஆமவடன்சாதிபது மினியாகுயாதி - யவளுடைய விராசித
னைக் கருதிநோக்கின், சேமமுடை யவடன திராசிகன்னி- செம்ம
லேயவள்ராசி துலாமுமாகும்,வாமமிகுமவள்வயதுபதினாறும்-
வாலிபமாமதப்பெண் கூடுநாளில், தாமமிகுசித்திரையாமாதந்
தன்னிற்-றனிச்சுக்ரவாரத்தி லுதித்தாள்பாரே ... ... (௯௯)

பாரேநீபஞ்சமியா மூத்திரத்திற் - பால்போலேகாயுமந்தப்
பருவந்தன்னில், மாறேநீமத்தியானம் பதினைந்துக்குண்- மகத்தா
னசதிபுருடர் கூடுநாளில், நேரேநீ மூன்றுதிங்க ளாகும்போது-
நிறையாக நாதவிந்து திரண்டெழுந்தே, ஆறேநீ யஞ்சுதிங்க ளம்
மாவாசை-யரகாபூர்வபட்ச ஞாயிறுமே ... ... ... (௱)

ஞாயிறுமந்நாற்றிற் பலிக்குஞ்சித்தி - நாதர்கடாமறைத்த
நூல் குருநூலாமல், ஆயிரமை யாயிரத்தை யாய்ந்துநோக்கி-
னுணதொகையைந்நூற்றி லடங்கிப்போமே, ஞாயிறுபோல்விளங்
குமென்ற வமுதவாக்கா - நவரத்ன நால்வேத முழுதுஞ்சொன்
னேன், ஆயிரத்திலறைகருவின் சூட்சாசூட்ச - மாதியெலாநவிலு
ங்காங் காண்டமுற்றே ... ... ... ... ... ... ...(௱க)

நாலாங்காண்டம்-முற்றிற்று.

௪ஆ காண்டம்-௪௰-விருத்தம்-௪௱௨.

# ஐந்தாங்காண்டம்.

ஆதிநடுவந்தமிலாப் பொருளைமுக்க - ணமலனையெண்டோ
ளனையம் பலத்திலாடும், சோதியைதின் மலனைநிரா மயனைமேரு
ட்-சுந்தரர்க்காப் பரவைபாற் றூதுசென்ற, கோதிலுமாபதியை
பசு பதியைத்தூய - குணக்குன்றையருட்கடலை யிமயவெற்புமா
திய லும்பாகனையன் போடுபோற்றி - மாசிலைந்தாங் காண்டமதை
வாய்விண்டேனே ... ... ... ... ... ... ... ... *

வாதமெனு நூற்கெல்லாங் குருநூலாகும்-வருந்தியிந்தவைந் நூறுங்கருவாப்பாடிச், சாதகமாப்பரிபாடை யனைத்துமேமார்த்-தாண்டனெனவிளக்கவைந் தாங்காண்டத்தில்,பூதமெனுமைம்பூத நிலையைக்கண்டு - போதவ்வவாசியொட்டி யறிவினாலே, காதவழி போகாமறக்கருத்தேடாமற்-காலறிந் துநிலையினின் றுக்குருதினேனே.

ஏதயிலொன்பூரணத்தா லுலகமாச்சு - தியம்பரியபிருதுவி யாற் பிண்டமாச்சு, வேதமெனு நிராமயத்தாற்றேபுவாச்சு-விளங் கிதிக்றவாசியினு லறிவுண்டாச்சு, வாதமெனும்வாசியினால் வாயுவ ண்டம்-வகையறிந்தா லாதியினுற் சத்தமாச்சு, பூதமென்றயோத மதை யறிந்தாராகிற்-பூபதியோகம்பெற்று வாழ்வர்தாமே... (ரு)

வாழ்வுடையோயறிவுடையோய் பொறையின்மிக்கோய்- வ ழூத்துநற்குணமுடையோய் வாய்மையோனே, கீழ்மையிலாப்பு லத்தியனே சொல்லக்கேளு - கேசரியின்வித்தைதனை யார்தாஞ் சொல்வார்,ஆழ்கடல்சூழவனியிசைக் குக்கல்போல- வாடுமாடுகள் போலத் திரிவாரல்லால், காழறிவாலண்டமெனுங் கல்லைக்காணூர்-கழறும்வெள்ளைக்கல்லதனைக் காண்பார்கொல்லோ ... .. (சு)

காணுதபிண்டமெனுங் கல்லையந்தக் - கருவறியாமதியிலிகள் காணமாட்டார், கோணுதவுருவதுவு மூரூபாரூபங்- குறும்பமோ வறிவார்க ளறியமாட்டார், ஆணுபரூபமதோகோடாகோடி-யாயி ரத்தெண்கலையிலோ ரண்டசோதி, எனுருங்கருவதுவோ பிண்டா பிண்ட-மிப்புவியின்மாந்தருக்குச் சாராதல்ற ... ... (எ)

சாருமேசற்குருவாஞ்சகலத்துக்குஞ்-சதுர்வேததீட்சைகுரு சொல்லவேண்டும், சீரியசற்குருவையடுத்தன்புசெய்து-செகற்கு ருவின்வாக்கியத்தைச் சோதித்தேறு, ஓரியனுமில்லாதபாவிகட்கே யோதுவரோர்வொருநாளுமேதார்சற்றும், ஏரியல்சற்குருவையடு த்தன்புசெய்தே-னியம்புமோர்பன்னிரண்டாண்டளவுந்தானே.()

## பூரணவழலை.

தானேதானண்டமதுதெரிந்தாலன்று-தானல்லோசிவசித்தன் ஞானியாவான், பானேதான்பரப்பிரம மதுவேயாச்சு - பராபர மாம்பரவெளியு மதுவேயாச்சு, கானேதான்கருவிகர ணாதியாச்சு-கருவுதித்தபிண்டமெனுங் கல்லுப்பாச்சு,வேனேதான்விந்துவுக்கு நாதமாச்சு-விந்துசத்தியுப்பாச்சு வீரமாச்சே ... ... (எ)

ஆச்சுமேயண்டசத்தி சிவமுமாச்சு - தாதியாநாதவிந்திரண்டு மாச்சு, போச்சதேபூரணமு மிதுவேயாச்சு - பூரணமாமெழுத்த துவு மிதுவேயாச்சு, வாய்ச்சுதப்பாவழலைக்கோ ராதியாச்சு - வள மானமுப்பூவு மிதுவேயாச்சு, தாட்சியிலாச்சாதியென்றபிறவியா ச்சு சதகோடிவித்தையெல்லா மிதற்குள்ளாச்சே ... .. (அ)

உள்ளானவடிமூல மிதுவேயாச்சு தோங்காரமுடிமூல மிது வேயாச்சு, விள்ளொணுசுழிமூல மிதுவேயாச்சு - விரிமூலாதார மென்ற சாரமாச்சு, கள்ளானசிவசத்தி மூலமாச்சு-காரத்தின்சவுக் காரவுப்பதாச்சு, அள்ளானவாதார வண்டமாச்சு-தடிமூடியையறி ந்தவனே யாசானுமே... ... ... ... ... ... ... (கூ)

பூமிநாதபிண்டம்.

ஆசானும்பூமியுடை நாதநாத - மப்பூவிற்றனிருந்த வண்ட பிண்டம், தேசானும்பூமியுடைவன்னங்கண்டு-தெளிவானபங்குனி சித் திரையைக்கண்டு, கோசானும்பூருவபட்சினியாஞ்சோதி-கோ மேதவிரத்தினம்போ லுதித்தாள்பாரு, காசானமண்டலத்திற் பி ண்டமாச்சு - கருவிகாணுதிகளு மிதற்குள்ளாச்சே ... ... (யஎ)

ஆச்சுதேயண்டசரா சரத்தில்பிண்ட-மாகாகாசொல்லுகிறே னுதியாதி, போச்சுதேஜயஞ்சுதிங்க ளானபிண்டம் - பொருளான வண்டத்தின் கல்லைவாங்கி, நாச்சுதேநாதசத்தி விந்தெடுத்து- நவி லுகிறேன்பாண்டத்தி னன்றுப்போடு, வேச்சுதேவேல்விழியாளு தந்தன்னை-விளங்கிரத்தினபாண்டத்தி லிட்டிடாயே... ... (யக)

இட்டிடுவாய்வேவ்வேறே பாண்டந்தன்னி-லென்மகனேதவ றுதே யின்னுங்கேளு, முட்டிடுவாய் முன்சொன்ன சிவத்தினுப் பை - முறையாகச்சொன்னெனிரண் டாங்காண்டத்தில், நட்டிடு வாய்பணவெடைதா னெடுத்துமைந்தா- நாதசத்திவிந்திலிடவமு தமாமே, அட்டிடுவாயமுதசத்தி யண்டத்தோடே - யழகானநா தநீர் கூடச்சேரோ ... ... ... ... ... ... ...(யஉ)

கைபாகசெய்பாகங்கள்.

சேர்த்திடுவாயிரண்டையுந்தா மொன்றச்சேர்த்துச்- சீராகக் கல்வத்தி லிட்டுமைந்தா, ஆர்த்திடுவாயமுதமென்ற குழவிகொண் டே - யாட்டிடுவாய்குருசலத்தை மூன்றுசாமம், * ஓர்த்திடுவாய் பராபரியைத் தியானஞ்செய்தே - யோமென்ற மந்திரத்தா லாட் டிப்பாரு, * கூர்த்திடுவாய் மூன்றுநாள் மூன்றுசாமங் - குணமா கவாட்டிடுவாய் கருப்போலாமே ... ... ... ... ...(யந)

ஆமேதான்கருத்திரண் டுருவாம்க்காணு - மைஞ்சுதிங்கட்பி ண்டமென்று மிதற்குப்பேரு, தேமேமூன்றங்காண்டத் தெனட் பாகந்தான் - றெரிவருபஞ்சீகாண தீட்சைசொன்னேன், கோமே வுபஞ்சகர்த்தர் தீட்சையாலே - கொடுமைசெறி யைம்பூதக்கல்லு மாச்சு, காமேவுமிக்குருவைக் கலக்கிதீரிற் - கண்மணியேதெளிய வைத் திறுத்துக்கொள்ளே ... ... ... ... .. ... (யச)

---

* ஓர்ந்திடுவாய் * கூர்ந்திடுவாய் - என்பன - ஓர்த்திடுவாய்- கூர்த்திடுவாய்-என விகாரப்பட்டன.

கொள்ளவென்று விக்குருவை யெடுத்துக்கொண்டு- குருவா கப்பாவித்தே யடுப்பிலேற்றிக், கொள்ளவென்றுவிக்குருவைக் கு மூக்காச்சிக் - குருவானகுருசெயநீ ரிறக்கிக்கொண்டு, அள்ளவெ ன்றுலாரவிட்டுக் குருநீர்விட்டே- யரகராதெளியவைத்தெடுத்துப் பாரு, மொள்ளவென்றுன்முத்துப்போற் கண்விட்டாடு - முனி யுனாத்தவாலரச மென்றுபேரே ... ... ... ... ...(௰௫)

பேரானவிச்சலத்தின் றெளிவிருத்தாற்- பேரொளியாம்பா ப்பிரம பிண்டங்காணும், காரானகதிர்போலே யுருவங்காணுங்-கா யவைப்பாய்ரவிதனிலே குருவைக்கொண்டு, சீராகவுலறவைத்தவ முதத்தாலே- திறமாகவிக்கருவைச் சுழற்றிடாய்நீ, ஆராய்நீவமுத சுத்தி யிரண்டதாச்சு- தடைவானஞ்சிநீ ரிதற்குப்பேரே... (௰௬)

பேரொன்றவிக்கருவைத் தெளியவைத்தாற் பெலமானவமுத மையாமூன்றுஞ்சுத்தி, காரொன்றகருவதுவுமிரவிதன்னிற்-கணக்கா கக்காய்ந்ததேற் கசிவற்றுப்போம், வாரொன்றமாக் கருவையெடுத் துக்கொண்டு- மகத்தானவூசிநீர்தன்னிலிட்டுத், தேரொன்றுதெளிய வைத் தெடுத்துக்கொண்டு-சீரானவிரவிதனில்வைத்திடாயே (௰௭)

வைத்தவிந்தக்கருவிரவிதன்னிற்காய்ந்தால்-வமுத்தரியவுரோ மநீர் மகத்துவத்தால், மைத்திடுமேக்கசிவெல்லாமிறங்கும்பாரு- கற் றவர்களறைதருமோ ரண்டவுப்பில்,வைத்திடுவாயெனிலாகுநாலா ஞ்சுத்தி- வண்மையாக்கருவெடுத்து ரோமநீரில், ஐந்தாகச்சுழற்றி யே யிருத்துக்கொண்டே- யதிவிறங்கு மமுதமன்றே தேசிநீரே.

நீரானகருவதுவும் ரவியிற்காய்ந்தா-னிகழ்ந்திடுமோர்தேசிநீ ரென்றேபேராம், காரானகருவதுநாலாங்காண்டத்திற் - கருமூன் றுங்காண்டத்திற் குகையின்சுன்னம், ஆரானவஞ்சு திங்கட்பிண்ட மாச்சு- தழகானகருச்சுன்னத் தறிந்துகொண்டு, சீரானகருவென் ன வென்றுலையா- தேசிநீரமுதத்தைக்கருவில்விட்டே ... (௰௯)

விட்டதனைச்சுழற்றியே தெளியவைத்தால்- விஞ்சைம்மூலம் மிறங்கு மிருத்துக்கொண்டு,திட்டமாக்குணமுடையோய்மாசிலா த-சிசாவிலையநீ பதனம்பண்ணு,முட்டிலாப்பிண்டகருவெடுத்துக் கொண்டு- மொழிவரியவிரவிதனிற் காயவைக்கின், விட்டோடுங்க சிவெல்லா மற்றபின்பு- விளங்குமந்தவுப்புமிகப் படருமன்றே.

சத்தியுப்பு - சிவவுப்பு.

படருமேயிம்முறையா ரவியிற்காய்ந்தாற்-பூத்தானநாதசுத் திபாத்தோடொக்கும்,அடருமேசிவசத்தி யிதுவேயாகு - மரகரா வைம்மூல மிதுமேயாகும், இடரிலாவிந்தவுப்புச் சத்திசொன்னு- வென்மகனேயான்கண்டே யுனக்குச்சொன்னேன், படருமிந்த வுப்பினதுவன்னமையாபகரியவெள்ளையதுசொல்லப்போமோ

சொல்லருமுடியாதவெடி யுப்பதாச்சு- துகளிலந்த வுப்பினிற மின்னுங்கேளு, நல்லகுணமுடைய புலத்தியனேயுத்த- நற்பளிங்குச்சுன்னம்போ லிருக்கும்வெண்மை,புல்லுபூரணமதிபோ லிருக்கும்பாரு-புகலரியவுப்பினதுகாரசாரம்,மல்லன்மிகுமாத்திலொருதோளையிட்டந்த- மகத்தானவுப்பதனைப் பணம்போல்வையே

வைத்தாயேபரிட்சைசெய்து பாருபாரு- வழுத்துமொருவாரமதிற் பட்டுப்போகும், பத்தியாவிதின்செய்திபின்னுங்கேளு பதனமாவுப்பினது முறையைமுன்னே, கைத்தலறவாதிகட்குச்சொன்னேனென்று- கனமானசிவசத்தி மகிமையாலே, உத்தமனேநூற்கெல்லாமாதியாக-வுற்றவிந்நூல்போலேயொருநூலுண்டோ

இந்நூல்போலெந்நூலு மில்லையெங்கு-மிந்நூலேயெந்நூற்குங் குருநூலாகும், அந்நூல்போலெந்நூலார்சொல்லவல்லா- ராதியெனுஞ்சோதியையாபராஞ்சோதி, மைந்தனேயிம்மூன்றுங்கூடினக்கால்- மகத்தானமுப்பூவு மிதுவாம்பாராய், என்றனையெட்டிரண்டும் பத்தேயாகு-மிதனாலேசாபமது நீங்கிப்போமே

சாப நீக்கல்.

நீக்கியேதென்மேற்குச்சிவந்தபூமி - நேராகவமைந்தநீ சென்றேயன்பா, நோக்கவேவேண்டுமென்றுற்சொல்லக்கேளு-நுவலரியவென்னுடையதியானங்கண்டு, போக்கியேபோகாதேநினைவாய்க்கொண்டு-புகழுடையவிந்தரகிரி தனைநேர்கண்டே,* எக்கிநீயலையாதேயின்னுங்கேளா- யென்மகனே சித்திரையா மாதந்தானே.

பந்தர் ஓமகுண்டம்.

மாதமென்றுவாடாதே பதினைந்துக்கு- மகத்தானவுத்திரமென் றனைசெய்நாளில், நாதமென்றபூருவமாம் பட்சந்தன்னி-னன்மைபெறுசுக்கிரனுங் கூடும்போது, வேதமெனும் விலாசத்தின்பூமிகண்டு- வேகமுள்ளமேல்காற்று வீசுங்காலை, பாதமென்ற பந்தரது பச்சைப்பந்தர்- பரிவாகமேடையுயர் வாகப்போடே (௨௬)

உயர்வாகமேடையிட் டோமகுண்டத்- தொளிர் பக்கநான்கினுமோர் வாயில்கோலி, அயர்வறவக்குண்டத்தி னாந்துநாளு- மடைவாகத்திட்சைமந் திரஞ்செபித்தே, நயமாகச்சலமதனையதனுள்வார்க்கி- னன்றாகப்பூபூத்துச் சொரியும்பாரு,மயலறவேவழிங்கானிற்கொண்டுவந்து- வண்மையுடனிரட்டிப்பா வதனுட்போடே.

கங்கைச்சமாதி திட்சை.

போட்டுபஞ்சவழுததனை யதனுள்வார்த்துப் - புகல்பத்துக் கொன்றேயாகாசமிசய், நீட்டியம்மேடைக்கு நடுவேயமைந்த-

---

* எங்கியென்பது-எக்கியென எதுகைநோக்கிவிகாரப்பட்டது

நினைவாகச்சமாதியிலுப் பெடுத்துவையே, தாட்டிகமாச்சொல்லி விட்டே னொளிக்கவில்லை- சாற்றரியவப்பந்தர் தனக்குநாப்பண், கோட்டமறப்பளிவிழுமப் பதத்தில்வைத்துக்- குழிவெட்டிப்பூமிக்குண் மூடிப்போடே ... ... ... ... ... ... (௨௮)

மூடியேயன்பாகக் காலைமாலை- மொழிவரியசத்திசிவதீட்சையோது, பாடுவாய்தீட்சையொருமண்டலந்தான் - பத்திமையாவிருந்துகொண் டதனையோது, நீடியவோர்மண்டலத்திலண்டபிண்ட- நிகழ்த்தரியபூவதுதான் பூக்கும்பாரு, வாடியேயிதைவிட்டுப் பூநீர்தேடி- ,வகையிதுவாமென்றெண்ணிக் காய்ச்சினரோ ...(௨௯)

உலகவாதிகளின்குணம்.

காய்ச்சினாலண்டபிண்ட மாகுமோதான்- கண்கெட்டமடையர்களே காரமாமோ, ஆக்சென்றவுப்புத்தான் பூத்தபூவா - மைந்நூற்றிற்காப்பாதி கடையும்பாரு, பாய்ச்சுகையிற்பழமாகு மண்டலத்திற்- பயனறிந்துபற்பினியின் றீட்சையோதின், எச்சிலாக்கடினமதா மெச்சரிக்கை யிடறுவந்தணுகாமற் றீட்சையோதே ௩௰

தீட்சையைநீமறந்துவிட்டாற் சவமாய்ப்போவாய்- செகற்குருவின்சாபமது பலியாதையா, நீட்சியாம் வெகுகடினம் பெரியோர்தம்மை - நேசித்தேயவர்கண்மன திரங்கச்செய்தே, ஆட்சியாக்கைபாகந் தீட்சைபாக- மடைவாகவருணர்த்த வறிந்துகொள்ளு தாட்சியிலாப்பரிபாடை பிரமகற்பந்-தனங்கோடிகொடுத்தாலுஞ் சொல்லாரன்றே ... ... ... ... ... ... (௩௧)

பிரமகற்பம்.

சொல்லாதபொருளையா பிரமகற்பஞ்- சொல்லாமன்மறைத்தார்கள் சித்தர்தாமும், கொல்லாமற்கொல்லுமையா வெளிவிடாதே - கோதையர்களாசையிலே சிக்கிடாதே, பொல்லாதபொருளதுகைக் கொண்டாயானாற்- புகலரியபிரமலபி தவறிப்போகும், வெல்லாமல்வெல்லுமந்த தீட்சைகண்டால்- வெகுகோடி வித்தையெலா மாடலாமே ... ... ... ... ... ... ... (௩௨)

ஆடலாமப்பதுவு மூப்பதாச்சு - தாரகராவுப்பதுவு மூப்பூவாச்சு, மூடலாமதிற்பிறந்த பிண்டமாச்சு- பிண்டத்தி லண்டமெனு மமுதமாச்சு, பாடலாம்பாலமுத மதுவேயாச்சு - பகர்மூலமென்னுமோ னாந்துமாச்சு, காடெலாங்காயமெனு மைங்காயத்தைக்- காணுமன்மானிடர்கள் கலங்கினரோ ... ... ... (௩௩)

கலங்காமலென்மகனேயன்பாக்கேளு - காயமெனுமைங்காயம் பதனம்பண்ணு, மயங்காதேமௌனமெனு மைங்காயந்தான் மகத்தானமாரணத்துக் காதிபீடம், தியங்காமற்சோவிலடைத்துக்

கொண்டு நீதிலாப்பேழையிலேபதனம்பண்ணு, வயங்குகின்றவெ ண்மகனே வாரந்தோறும்-வண்மையாச்சற்குருவைப்பூசிப்பாயே

பூசிப்பாய்நாடோறும்பூசித்தக்காற்- புகழான மாந்த்ரீகமித னுலாமே, யாசிப்பாய்சித்துகளிலனேகஞ்சித்தா- மறுபத்துநாலு சித்து மிதனாலாடும், நேசிப்பாய்நாதர்கடாமறைத்தவெல்லா-நிலை வரமாவெளியிட்டேன் பண்பாப்பாரு, வாசிப்பா யென்னுடைய நூல்கடோறு- மறைத்தவெல்லாங்குருவாணை வெளியிடாதே (௫௫)

வெளியாகச்சொன்னென்மதி வெண்பாநூறும் - வெகுளா தேகுருமுறையுஞ் சொன்னேனன்று, அளியோடை யாயிரமாம் பெருநூல்சொன்னே- னதற்குமிந்தவைந்நூறுங் குருநூலாகும், நளிகடல்சூழ்தாரிலத்தோ ரதிற்றுய்தற்கு- நயமான்முறைதயனைத் து மிந்நூற்குள்ளே, தெளிவாகச் சொன்னேன்பா ராருஞ்சொல் லார் செப்பரியசித்தருக்குங் குருநூலாமே ... ... ... (௫௬)

ஆமேதான்சொல்லுகிறேன் வழலையாதி - யாருக்கும்வெளி விடா தடக்கம்பண்ணு, பாமேதான்பாலுக்குக்குருவாமொரு-பா வித்தவண்டமதை யெடுத்துக்கொண்டு, காமேதான்கல்வத்தி லண் டமிட்டுக்-கருவானவைம்மூல மதனில்விட்டு, வாமேதான்வண்மை யுள்ள குழவிகொண்டு- வளமாகவிருசாம மாட்டுவாயே... (௫௭)

ஆட்டுவாய்மெழுகாக விருக்கும்பாரு- வையனே மெழுகெ டுத்துக் குகைபோற்பண்ணு, தேட்டமா விரவிதனிற் காயவைத் துச்- செயமானகுகையெடுத்து வைத்துக்கொள்ளு, கோட்டமி லாப்புலத்தியனே கூறவொண்ணாக் - குருவானமுப்பூவைக்கூறக் கேளு, தாட்கமாக் குகையெடுத்த தனிலத்தச் - சாற்றரியமுப்பூ வைப் போட்டிடாயே ... ... ... ... ... ... (௫௮)

போட்டிடுவாய் பற்பனியினுப்பைப்போட்டாற் - புகழாக வுருகியது மணியாமைந்தா, தேட்டமாக்குகைதனிலே மணியைப் போட்டுத் - தெளிவானமெழுகதனால்வாயைமூடி, மூட்டிடுவாய் குருநாலம்பதிலேசொன்ன- முறைப்படியே யெருவடுக்கிப் புட த்திற்போடு, மாட்டிடுவாய்கெசபுடத்திற் போட்டாயாகில்- மகத் தானஅன்னமதா மென்சொல்வேனே ... ... ... ... (௫௯)

குருநூலைம்பது- மதிவெண்பா- நந்தீசர்நிகண்டு:

என்மகனேகுருநூலைம் பதினிற்சொன்னே - னெடுத்துமுப் பூபரிபாடை தன்னிற்சொன்னேன், துன்னுநந்தீசர்நிகண்டாமுந் நூற்றிற்- செப்பினார்சிறிதுசிறி தன்பாயானும், பன்னருமிந்நூ லிற்கை பாகத்தோடு- பண்புடனே சொல்லிவைத்தேன் றீட்சை பாகம், நன்னயமாமிந்நூலில்வாதஞ்சித்தி- நவில்வாதிகட்கிந்நூல் பொய்க்காதன்றே ... ... ... ... ... ... ... (௬௰)

அறைவரியகுருசுன்ன முடிந்துபோச்சு-தையனேபூசித்துத் தரிசிப்பாய்நீ, மறுவறுசீர்க்குமரியெனும் வாலைப்பெண்ணை-வள மாகப்பூசைசெய்து வைத்துக்கொள்ளே, துறையறிந்தவேதாந்த குருவின்வாக்யஞ் - சொல்லாதேகன்னிமணியே விடக்கல்லைத்தான், மறைபொருளா வென்றாது வெளிவிட்டக்கான்- மைந்தனே தலை வெடித்துச் சாவாய்பாரோ... ... ... ... ... ... (௪௧)

விடக்கல்.

பாராருமிக்கலுக்கடுத்தகோவை-பாடினேனையாயிரத்திற்செ ப்பவொண்ணாச், சீராரும்விடக்கல்வேதாந்தநூலிற்-செப்பவில்லை யொளித்திட்டாரதனாலேதான், பேராருமகிதலத்தில்வாதமெல்லா ம்-பேய்மகனேவீணாகப் பொய்த்துப்போச்சு,தேராகவென்றனூ லியம்புங்கல்லை-யினிதாயான்சொன்னாற்போலெவர்சொல்வாரோ()

சொல்லரியவிந்நூலைந்தாங்காண்டத்திற் - சொல்லியவக்கரு வையெலாஞ் சொல்லக்கேளு, நல்லவொருபற்பினியின்முடிதான் கொண்டு - நற்பனையாம்பாடாணமண்டத்தோடு,சொல்லரியகவ் வத்தினான்குமிட்டுச் - சுடரிரத்னவிந்ததினால் மெழுகாவாட்டு,வல் லமையாவழித்தெடுத்து வில்லைசெய்து - மகத்தான ரவிதனிலே வைத்திடாயே ... ... ... ... ... ... ... ... (௪௩)

வைத்திடுவாயிரவிதனிலெட்டுசாமம்-வண்மையுடன்காயவை த்தெடுத்துக்கொண்டு,புத்தியொடுசிந்தூரத்தின்பட்டைகொண்டு- புகழாகக்கோழியென்றபுடத்தைப்போடே எய்த்திடாதெழுபுகை போய்மறையநன்று-விடைவிடாதேவிசிறியாலேவீசுபத்தியொடு நீயவிந்தபிறகுபார்க்கிற்பரனருளால்விடசுன்னம்பிறக்குந்தானே

தானென்றசுன்னத்தையெடுத்துப்பார்த்தாற்- சந்திரன்போ ற்சுடர்விட்டுப்பிரகாசிக்கும்,மாறென்றசுன்னத்திலெடைவிராகன்- மாட்டிடுவாய்பனிநீர்போற் றெளிந்துபோகும், ஊனமறமுன் சொன்னமுறைதானையா- வோரையமிலையிரண்டைச்சரியாக்கொ ண்டு,கோனென்றசுத்தசலந்தன்னிற்போட்டாற்-கொதித்துடனே தெளியுங்காணின்னுங்கேளே ... ... ... ... ... (௪௫)

கேசரக்குளிகை.

கேளையாவிம்முறையையெவர்தாஞ்செய்வார்- கேசரத்தின் வாலைரசமிதனாற்கட்டு, ஆளையாவதுபத்து நான்குஞ்சித்தி- யண்ட சத்தசாகரமுமிதனாற்சித்தி,காலையாகற்பங்களிதனாற்சித்தி,காலகொ டுவிடமிஃது கண்டுகொள்ளே, மாணுமையா மகத்தானசரக்கெல் லாந்தா- மாண்டிடுமேவிடம்பட்டாலுடனேமாதோ ... (௪௬)

மாதர்மயலற்றபுலத்தியனேகேளு-மகிமை நிறைவிடக்கல்லை நூல்கடோறும், கோதறுசீர்ச்சித்தரெல்லாமறைத்துச்சொன்னார்-கு

ணமாகயானதனை வெளியாச்சொன்னேன், ஏதமிலாய் புகழுடை
நந்தீசராணை-யினிதாகவறிந்துகொண்மயனுறுதேஆதரவாய்பிறை
முடித்தவையன்மேறு-ளறைந்திட்டபடியானுமறைந்திட்டேனே

அறைந்திட்டேனென்றன்மே லாணையாணை-யாருக்குமிம்மு
றையைச்சொல்லவேண்டாம், விரைந்திட்டே னிம்முறையின்றீட்
சைமார்க்கம்- வேதாந்தமைந்நூற்றைப்பதனம்பண்ணு, கரைந்தி
ட்டேனிந்நூலை வெளிவிடாதே- காசினியின்மானிடர்க்குக் காட்ட
வேண்டாம், திறந்திட்டேனிந்நூலைந்தாங்காண்டத்திந்- றேயத்திற்
கிடையாதுபதனம்பண்ணே ... ... ... ... ... (௪௮)

பதனமிகுவெகுபதனை மைஞ்சாங்காண்டம் - படிப்படியா
ய்ச்சொல்லிவைத்தேன்முப்பூமார்க்கம், அதிநலமா மென்பாடன்
மூன்றுலட்சத்- தன்றிமற்றெவற்றினுமிம் முறையேயில்லை, சதம
தொருசிறிதுமிலாப்பதினெண்பேருங்-கபடமதாச்சொல்லிவைத்
தார்நூல்கடோறும், அதிகமிஃதாயிரத்தெட்டண்டத்திற்கு- மதிக
மைந்தாங்காண்டமோ வதிகங்காணே ... ... ... ... (௪௯)

காண்டகுநற்குணமுடையாயன்பின்மிக்காய்கல்வியறிவுடை
யாய்கண்மணியேகேளாய், மாண்டபுகழகத்தியன்வாக் கமுதவாக்
கா-மாசிலையாயிரத்தினுக்கீ தயிராம்பாரு, வேண்டுமெனில்வேதா
ந்தசுருக்கம்பாரு-மேதருமைந்தாங்காண்டச்செல்யுனூற்றில், கோ
ண்டருமோர்நெறியகன்று குருவைக்கண்டு - குகையில்வந்துசிவ
யோகக் கற்பமுண்ணே ... ... ... ... .. ... (௫௰)

கற்பக்கரு.

கற்பமதுவாதத்தின்குருதானையா கபடமாவிலைகற்பமென்று
சொன்னார், அற்பமாமஃதாகா ஒருநாளேனு-மையையோவுன்னு
யிர்தான்மாயுங்காணே, கற்பமதுதீட்சைசெய்தவாமப்பாலைக் கண்
டுகுருவென்றுசொல்லிப் பணம்போற்கொள்ளுநு, விற்பனமாநீதா
னோர்மண்டலத்துன்மேன்மைபெறுகாமப்பாற்றீட்சைகொள்ளே

கொள்ளுமறுமண்டலத்திற் பனிநீர்கொள்ளு - கொடுங்கார
மெத்தவையா வனுப்போற்கொள்ளு, அள்ளையாகற்பங்கா யாதி
கொள்ளு- வதன்பினர்ப்பஞ் சீகரணமுடிவுகாணும், வெள்ளையா
வைஞ்சுகற்பமுடிந்துபோச்சு- வெளியினுனை யெவர்காணப்போ
கிறார்கள், நில்லையாகோடியுகம்வாழலாகு-நிமிடத்திற்கெவனத்திற்
காணலாமே ... ... ... ... ... ... ... ... (௫௨)

காணப்பாதத்துவங்கடொன் றூர்முறுங்கண்மணியேசபை
யாருங்காண்பாரையா, மாணப்பாவாதமென்றகருவைக்கண்டால்
வாதபித்தசிலேத்துமத்தைமடித்துக்கொள்வாய், ஏணப்பாவெட்
டாண்டும்பத்துஞ்சாண்பா-ரிருப்பாரேகோடியுக மெனைப்போல்

வாழ்வார், வேணப்பாவையகத்தின் மாண்பர்கூடி - வேதமென்ற
சாத்திரத்தை வெளிவிட்டாரோ ... ... ... ... ... (௫௩)

விட்டாரேசித்தர்கடாஞ்சொன்னநூலில் - விவேகத்தாலடக்
காமல்வேடம்பூண்டார்- கெட்டாரேயவர்கொடிய மனத்தினாலே,
கேடுகெட்டசண்டாளர் கூட்டங்கூடி, தொட்டாரோவழலையென்ற
வாதியாதி-தொடுத்தாரோசரியையில்வாழ்பவனாயெல்லாம்,விட்டா
ரோயவர்பொருளைநாசமாக்கி - வெற்றோடுகையிற்கொடுத்து விடு
வார்பாரோ ... ... ... ... ... ... ... ... ...(௫௪)

விடுவார்களவர்மனதுநொந்ததாலல்- விளங்குவரோவொரு
க்காலும் விளங்கார்மேலும், கொடுநோயாங்குட்டமொடுபாண்டு
ரோகம் - கொண்டலைவாரென்பதற்கோ ஐயமில்லை,கெடுவார்கள்
கன்மகாண்டத்திற்சொன்ன - கிரியைகளைச்செய்தாலுமுய்யமாட்
டார், படிமீதிற்பொய்வேடம் பூண்டோர்க்கிந்நூல்-பகரவிலைசிவ
யோகிக்காகுமன்றே ... ... ... ... ... ... (௫௫)

துலராசி.

யோகியென்ற பேர்படைத்தோ னுலகிலைய- வொருகோடி
மாந்தர்களி லொருவனுண்டு, தேகியென்றபெயரானதா னவற்கே
செல்லுஞ் - செடத்திலுள்ள கூறதுவு மவற்கேதோன்றும்,சோக
மிலாயோகிகட்கே யிராசிக்கூறு - சொல்லரியவிட்டகுறை புத்தி
நுட்பம்,ஊகிக்கிற்றுலராசி சென்மக்கூறங் - குதிக்கும்போதவற்
கிவைகள் பூர்வமாமே ... ... ... ... ... ... (௫௬)

பூர்வமாமொன்பதற்கு ளெய்தவொண்ணாப்- புகழ்படைத்த
பூர்வமெஞ் ஞானந்தன்னால், பூர்வந்தால் வயிற்றிலவ னுதிக்குநா
ளிற்-புகலரியபராபரத்தைப் பணிந்தேபோற்றும், கூர்மையாய்ப்
பராபரனை யன்புகொண்டு - கூறுமனக்கண்ணாலே யொட்டிப்பா
ர்க்கும், சீர்நோக்கிற்செயகம்பம் பரத்தினேர்மை- சிவசிவாபால
கற்குத் தெரியும்பாரோ ... ... ... ... ... ... ... (௫௭)

தெரியும்பார்செயகம்பம் பரத்தினேர்மை - தேனமுதமத
னப்பால் சிறந்தேபாயும், அறியவந்தப் பாலகனு மொழிதற்கொ
ண்ணா-வமுதத்தையடுத்துவாய் மடுக்குநாளும், பரிவாகவமுதத்
தை யடுத்துண்டக்கால் - பரிபாடைபதினெட்டும் பண்பாப்பே
சும், துருவமாந்துலாராசி பூர்வஞானந்- தொடர்ந்துவரு ம்விடா
லைய சொன்னேன்பாரோ ... ... ... ... ... ... (௫௮)

மச்சரோகைமுதலியன.

சொன்னவொருபத்துக்கு ணிராதாரத்தின்- சொல்லரியமவு
னமையா வபானவாயு, அன்னைமிக வலக்கணூற துறைந்துதன்ன-
வரனருளாற்பாலகனு மவனிமீதில்; சொன்னவிக்கிரகம்போல்வந்

னுதோன்றுந் - துகளறுசீ ரம்மகவின் கருக்கூறைய, என்னென்று சொல்லுவல்யா னியம்பவொண்ணா-திடம்வலமாவிரோகையொன் றிருக்குந்தானே... ... ... ... .. ... ... ... (௫௯)

தானென்றபாலகற்குழு துகின்மச்சஞ்-சாற்றுதனரோகைநெ ற்றி தன்னிற்சுக்ரன், பூனென்றவிருபுறமுஞ்சக்கரந்தான்-புகழ்பெ ரியமார்புதனிற்பிறைபோன்மச்சம்வாவென்றவுண்ணாக்கின்மவுன ரோகை-வளர்பிறைபோற்றானிருக்கு மைந்தாகேளு, கோனென்ற வமரர்குரு வியாழன்றானுங்-கூறரியசுக்கிரனும்பார்வையாமே.()

ஆமதுதானடுநாவி லமுதகங்கை - யாகராயரத்தினுடை மகி மையாமே, போமதுதானுண்ணாவி லமுதசத்தி - புகழ்பெரியபா லனுக்கு மவுனஞ்சொல்வாள், வாமமிகுவாமிசிவகாமரூபி- மைந் தனுக்கோருபதேச மளிப்பாள்பாரு, தேமதுதான்மவுனசிவயோ காசி-தெளிவாகச்சித்திக்கு முண்மைமாதோ ... ... (௬௧)

சித்திக்குஞ்செகராசி யிதுதானையா-செகத்குருவாவான்சித்த னுவான்பாரு, அத்திக்குமைஞ்சுவயதானாலே- வன்றன்றேவகத்தீ சர்மவுனஞ்சொல்வார்முத்திக்கேயருகளும்படிச்செய்திட்டு மோ னநிலைபெறுதற்கு மூலஞ்சொல்வேன், பத்திக்கோர்வித்தெனுமீ ரொன்பான்சித்தர்,பாலிப்பாதியானத்தாற்சொலிப்பாய்மன்னே

சொலித்திடவேயோகமொடு ஞானஞ்சொல்வார்-சொற்பெ ரியயோகசிவ மவுனஞ்சொல்வார்,கெலித்திடவேசித்தர்தமக்கடை யாளம்பார்-கிருபையுடன்யான்சொன்னே னறிந்துகொள்ளு, ப லித்திடவேபரிபாடைத் தியானஞ்சொல்வார்-பஞ்சபட்சிதாமொ டுங்குஞ் சுவையுஞ்சொல்வார்,அனுத்துவிட்டேல்வழுத்தரியவாதஞ் சித்தி-யதையறியப்பலரிங்கே யலைவராமே ... ... ...(௬௨)

புத்திகெட்டவாதி.

ஆமேயிவ்வையகத்தே மடையர்கூடி - யலைந்தலைந்துசுட்ட திலாவதென்ன, போமேதான்புகையெழும்பிமேகம்போலப்- பொருமிய கண்கெட்டுப் போவார்பாரு, வாமேதான்வாய்புலம் பி மடையரெல்லாம்- வாதமதுபலிக்குமென்றே பொருள்கட்டோ ற்றுக், காமேதான்கடைசரக்கைச் சுட்டுச்சுட்டுக் - கருவறிந்தயோ கியைப்போற் கண்கெட்டாரே ... ... ... ... ... (௬௪)

கருவென்னகுருவென்ன விராசியோர்க்குக்-கண்ணாடிமுகம் போலே காணும்பாரு, பருவென்னதிருவென்ன துலராசிக்குப்- பாத்திரரா மவர்பெருமை சொல்லப்போமோ, புருவென்னபுக ழென்ன சொரூபஞ்சித்தி-புகழ்பெரியவிடக்கல்லிற் பலிக்கும்வா தம், வருமென்னவகையென்ன தொகைதானென்ன - வழுத்தைத் தாங்காண்டத்து மறைப்பிராதே ... ... ... ... ... (௬௫)

மறையாமற்சொல்லுகிறேன் மைந்தாகேளு- மகத்தானபரி பர்டையில்லாமற்றான், குறையாமற்சொல்லுகிறே னன்புகொ ண்டு- கோடானகோடிவித்தையினிமேற்பாரு, அறையாமலறை யையாயிரத்துச்சொச்ச -மாயிரத்தெட் டிதழப்பா வைஞ்சாங் காண்டத், துறையிலோர்துறையறிந்து துருவங்கண்டு- துருவத்தி ன்மேலேறிக் கருக்கண்டேனே ... ... ... ... ... (சுசு)

பராபரதீட்சை.

கருவானபொருளேயா மூலாதாரங்- கருவறிந்த மூலத்தின் மேலாதாரம், அருளானவருளேயா வாதாரத்தை- யறிவாலேயறிந் தெனிரா தாரமூலம், குருவானவிருளேயா பராபரத்தின்- குண மானவெளியையா நாதவிந்து, தருளானதருளேயா சபைதானுகு ஞ்- சமரசத்தின்மூலமையா வாறுமாச்சே ... ... ... (சுஎ)

நிராதாரதீட்சை.

ஆறுமேமவுனசிவ யோகதீட்சை- யையனே வறைந்திட்டே னுர்தாஞ்சொல்வார், பாறுமேபராபரத்தின் தீட்சையாச்சு- பாடு கிறேனிராதாரதீட்சைகேளு, நீறுமேநிராதார மகத்தாந்தீட்சை- நினைவோடுகேட்டிடுவாய் நேர்மையாக, ஆறுமே அகாரமது உகா ரங்கொண்டே- யரகாரயவசிமந அரஞாமென்னே ... (சுஅ)

நிர்க்குணதீட்சை.

ஓமதுதானிராதாரதீட்சையாச்சு-தோகோகோநிற்குணத்தின் தீட்சைகேளு, வாமமதுவகாரமுடன் யகாரங்கொண்டு- மாட்டுகி றேன்யவசிநம அரஉஊமென்று, நாமமதுசொன்னேனிர்க் குணத் தின்தீட்சை- நன்றாகமுப்பூவின் தீட்சையாகும், நேமமதாநிர்க்கு ணத்தின் தீட்சையாச்சு- நின்மலமாந்தசதீட்சை நேர்மைகேளே.

நின்மலதீட்சை.

நேர்மையாநின்மலத்தின் தீட்சைதன்னை-நேயமொடுசொல் லுகிறே னினைவாக்கேளு, சீர்மையாஞ்சிகாரத்தி லுகாரந்தானுஞ் சிமநயவறீம்றீம்சிங்கென்றேயூன்று, நீர்மையா நின்மலத்தின் தீட் சையாச்சு-நிகழ்த்தரியசித்தர்களுமிவ்வாறோதார், வார்மையாநின் மலத்தின்தீட்சைசொன்னேமகத்தான பூரணத்தின் மகிமைகேளே

பூரணதீட்சை.

கேளேநீபூரணத்தின் தீட்சைசொல்வேன் - கேடிலாநாதர்க டாஞ் சப்தகோடி, ஆளேதான்றசதீட்சை பார்த்துத்தேறி - யண் டபகிரண்டநவ கண்டம்பாய்ந்தார், தாளேதானகாரத்தில் உகார மேறி- நயவசிமநறீங்ஸ்ரீங்ஓ மென்றேயூன்று,வாளேதான்பூரணத் தின்தீட்சையாச்சு. வளமானவாதாரதீட்சைபாரோ... ... (எக)

## ஆதாரதிட்சை.

பாராயோவாதார திட்சைசொல்வேன்- பாலகனே யாதாரதி
ட்சையையா, மாராயோகிகாரத்தில் உகாரங்காணும்-மநயவசிவுஞ்
சிங்கிறிங்கென்றேயேதாய், ஆராயோவாதாரதிட்சையாச்சு-தண்ட
சத்தசரகரமு மடங்கிப்போச்சு, ஏராயோர்பூரண்ட வகண்டம
ட்டு- மேறலாம்வாசிகொண்டு திட்சையாமே ... ... ... (எஉ)

பாமேதானுதாரதிட்சையாச்சு- பகருமொரு திட்சையிம்நில்
லாவிட்டால், வுமேதான்யோரா துமுப்பூத்தானு-மெந்தவிதம்பூர
த்தாலு மனங்கூடாது, ஊமேதாமேனராகு முப்பூத்தானு- முறைத்
தாமேயவரவர்க மட்சைதாமும், சிரானசத்திசிவதிட்சைதாமுஞ்-
செப்புவதிற்பயனில்லை நூலைப்பாமே ... ... ... ... (எந)

நூல்பார்த்துலலாடமதிலேறிப்பார்த்தே- னுவலரியபாதரிச
னத்தைக்கண்டேன்,கால்பார்த்தேனதற்கப்பால்வாசிகொண்டு கரு
த்தோடுபார்க்கையிலேநிராதாரத்தைநில்பார்த்துநிராதாரந்தன்னை
க்கண்டு-நேராகப்பூசித்தேனப்பாற்கேளு, வால்பார்த்து வாசிசிவ
யோகங்கண்டான்- மகத்தானநிர்க்குணமேபலிதமாமே ...(எச)

பலிதமென்ற நிகண்டையா வஞ்சாங்காண்டம்- பாடினே
னிந்நூல்போலொருநூலில்லை, பலிதமையாயிரத்திணுக்கோருயி
ராமிந்தப்- பாரதனிலாரறிவா ரிந்நூறன்னை, நலிதரா துளத்தெளி
ந்தமேலோரெல்லா - நவிலருஞ்சீரிந்நூலைக்கைக்கொண்டார்கள்
வலியமனமடக்கிநலோர்க்கடிமைசெய்து-மைந்தனேயன்னிரண்
டுவருடங்காத்தீர் ... ... ... ... ... ... ... (எரு)

சார்த்திருந்தவர்மகிழத் தொண்டுசெய்தாற்- கல்வியறிவதனு
லேகண்டுகொண்டு, ஆர்த்தியொடு நீயாரென்றன்றுகேட்டே- யன்
புடையமகனென்றே யறிந்தெடுத்துச், சேர்த்தணைத்தைந்நூற்றை
யெடுத்துக்காட்டிச்-செய்பாகங்கைபாகஞ்சீர்மையாக, வார்த்தை
சொல்விமெய்ம்மொழியையுபதேசித்து -வைத்திருப்பார்பக்கத்
தின் மனமொன்றுமே ... ... ... ... ... ... (எசு)

ஆமேதான்முன்சொன்னகருதானைய-வறிவாச்சுதின்னுநீசொ
ல்லக்கேளு, காமேதான்களைத்திறுத்த சலத்தையென்றன்-கண்ம
ணியேபத்துமுறை யமுதசுத்தி, பாமேதான் பாலமுதம்போலே
காணும்-பாலகனேயமுத்தையெடுத்துக்கொண்டு, வாமேதானடுப்
பேற்றித்தியைமூட்டி- மைந்தனேகாயவைப்பாய் சாமந்தானே.

சாமந்தான்காயவைத் திறக்கிப்பார்த்தாற்- சாற்றரிதாய்க்கு
ழம்பதுபோ லிருகும்பாரு, சேமமதாச்சுத்தசலந் தன்னைவார்த்
துத்- தெளியவைத்தான்முத்துப்போற் றெளிந்துகாணும், காமம

தாவிரவிதனிற்காயவைப்பாய்-கசிவெல்லாம்போய்ச்சிவந்து காட் டுமீண்டும், யாமமாப்பத்துமுறை ரவியிற்காய்ந்தாற்- படருமை யாவெள்ளைக்கல்லுப்பதாமே ... ... ... ... ... (எஅ)

வெண்சாரையுப்பு.

ஒப்பிலாவுப்பதுவும் பிட்டுப்போலா - மேகோகோவெழும் புமையாசாரைபோல, வெப்பானவுப்பதுவுஞ் சீறுஞ்சீறும்- வெ ண்சாரையிதற்குப்பேர்விடம்பொல்லாது, தப்பிலாவுப்பினிறமெ ன்னசொல்வேன்-தவளநிறச்சந்திரன்போ லொளிருமையா, செப் பரியசிவவுப்பெல்றிதற்குப்பேராஞ்- சீரானபராபரத்தைத்தியா னஞ்செய்யே... ... ... ... ... ... ... ... ...(எகூ)

பரபூசைமுதலியன.

செய்துபரபூசைகுரு பூசைமேலாஞ்- சிற்பரியா மனோகவுரி வாலைபூசை, எய்தரியசத்திசிவபூசைசெய்தே- யேசிலண்டவுப்பெ டுத்தடக்கம்பண்ணு, மெய்யிதுவாஞ்சொல்லிவிட்டேனொளிக்கவி ல்லை- வேதாந்தசற்குருதன்பாதத்தாணை, நைவரவேவெளியிட்டுச் சொல்லேனென்று-நதர்காவெஞ்சாபமதைநாட்டினாரே (அ௦)

நாட்டினார்சாபமதைப்பதினெண்சித்தர்- நவிலரியநற்றவத் துமுனிவர்சாபம், மூட்டினார்சதகோடிசித்தர்சாப-மொழிந்தனர் ந்நூற்றந்தச்சாபந்தன்னை,விட்டிடுதற்கவரோடே யெதிர்த்தியானு ம்விளம்பரியபரனருளா னிவிர்த்திசெய்தேன்,காட்டினேரிந்நூலை வெளிவிட்டோர்கள்- காசினியிற்கழுதையாய்ச் சனிப்பாராமால்.

ஆமேதானின்னுமொரு கருவைக்கேளு - வாகாயநாதசத்தி யுப்பையன்பா, நாமேவச்சொல்லுகிறேனதைகேளுமி- நாதாந்தசிரோ மணியின்கூற்றைநன்றாவாமேதான் வழலைப்பெண்சாலைக்கன்னி வழுத்தரியபத்துவயதானகன்னி, தேமேவுதேசிகமா மிவடன்பே ச்சு- சிவனுடனேகூடிவிளையாடினாளே... ... ... ... (அக)

ஆடினாளன்புடனே தேவதாசி- யமுதமென்றநாதவிந்திற்கூ டினாள்பார், பாடினாள்பனியென்ற விந்திற்சேர்ந்தாள்- பளிச்செ ன்றுதெளிந்தெழுந்தாள் பாத்தின்றேசி, சாடினாளவள்சென்றவிந் திற்சேரச்- சலவடிவாங்கங்கையது பொங்கும்பாரு, வாடினடெ ளிந்ததண்ணீரமுதமாச்சு-மகத்தானதேசிநீரொன்றும்பேரோ (அ௨)

போரானவச்சலந்தான்றெளிந்ததானற்- பேசுதற்குநாவெழு மோ யாவர்க்கேனும், வீரானவிரிலையயாவூசிகொண்டு- விட்டக் காலச்சலந்தான் றெளிந்துபோகும், ஆரானவூசிநீ ரமுதமாச்சு- தன்றன்றேதெளிவாச்சு தமுரியாச்சு, காரானதென் றனக்கோரிர ட்டிப்பாச்சு- கன்னியென்றவூசிநீரிதற்குப்பேரோ ... (அ௩)

இதுவன்றேவெண்மைநிறக் கிளிஞ்சிலண்ட-மிதினுடையவி
ந்தெடுத்துநாதத்தூட்டி, அதியானவண்டமையா விரண்டாம்வை
ப்பா- மதினுடையவிந்துநீர் கிளிஞ்சிநீராம், மதியுடையவஞ்சியி
வளோசைக்காரி-மயக்கினளென்றனையுமயங்கினேன்யான், பதியா
னகிரியென்றூர் கிரிதானன்று-பகர்கிரியிலமர்தேசி யண்டமாமே.

## தேசிநீர்.

தேசியென்றாற்றேசியன்றத் தேசியண்டத்- தேசியிவள்குடி
யிருப்பு மூன்றும்வைப்பு, பாசியென்றாற்பாசியன்று பாசியண்
டம்- பகராதபொருளையாநாலாம்வைப்பு, வாசியென்றால் வாசி
யன்றுசிநீர்தான்- மகத்தானவுண்மையா வைஞ்சாம்வைப்பு
வேசியென்றால்வேசியன்று குமரியாளுண் - மேலானவண்டமை
யா வாறும்வைப்பே ... ... ... ... ... ... ...(அசு)

வைப்பானவைப்பொன்றுந் தப்போவில்லை - வயிரமாமுயி
ராயா வுரைக்கப்போமோ, உப்பானவுரோமநீ ரப்பினண்ட-மு
டன்சேர்த்தகருவையா வேழாம்வைப்பு, செப்பரியபொருளிதை
யார் செப்பவல்லார்- செயமானகுருவிதுதா னெட்டாம் வைப்
பே, அப்பானவப்பதையு மறிந்துகொள்ளு - வடங்காத வண்ட
மையா குருநீராமே... ... ... .. ... ... ... (அஎ)

## கம்பியுப்புப்-பாறையுப்பு.

குருவானகுருத்திரண் டொன்மதற்குட்-குருநீராவாங்கியே
சுத்திசெய்தால், அருவானகருத்திரண்டு கம்பியாச்சு - ததற்கடி
யிற்பாறையெனும் பொருடானுச்சு, பருவமொருபத்துக்குட்ப
ருவப்பெண்ணின்- பாவியத்தையென்னுமேலசொல்லப்போமோ,
மருவானமங்கைப்பெண் பெற்றவண்ட- மகத்தான வொன்பதற்
குட்பத்துமாச்சே... ... ... ... ... ... ... ...(அஅ)

ஆச்சதுபாரண்டத்தி னமுரிகங்கை - படங்காதவச்சவத்தா
லமுதசுத்தி, பேச்சிதுபார்பேசாத கருவையெல்லாம் - பேசிவை
த்தேனந்நூற்றிற்பெருமையாக, வாச்சுதுபார்மகத்தான பொரு
ளையெல்லா- மாட்டினேன்புலத்தியனே யறிந்துகொள்ளு, ஓச்சு
துபார்முறைதவறு தின்னுஞ்சொன்னே- னுனக்கெய்து மெய்தரி
யமூத்திதானே ... ... ... ... ... ... ... ...(அகூ)

மூத்தியென்றவாறேதோ வெனக்குச்சொல்லு-மூத்தியென்
றசத்தியாம் வாலைப்பெண்டான், பத்தியென்ற பத்தியது சித்தி
கோடி- பகரார்களுதர்கடாம் பண்பாத்தானும், பத்தியென்ற
வாறேதோ வெனக்குச்சொல்லும்- பாசத்திமகிமையது பச்சை,

வஞ்னம், அத்தியென்றுலத்தியமுந் தார்தாஞ்சொல்வா ரடிமுடியினுள்ளிருந்து வானையாமே ... ... ... ... ... ... (௯௧)

ஆனையென்றவாறேது சொல்வீரையா- வானையென்றரசமது தான்விந்துபாரு, ஆனையென்றுலானையதுமதத்தயானை-யப்பெரியயானைதனையார்தாம்வெல்வார், ஆனையென்றவாறதனைச்சொல்வீரையா-வரிவைவிந்துநாதமதினைஞ்சாஞ்சுத்தி, சேனையென்றசேனையமுந் தண்டவேர்தான்- சொல்லாதமவுனமது சொல்லக்கேளே.

சல்லிவேர்.

கேளென்னச்சீடன்மகிழ்ந் தெனையாளென்று- கேட்டதினுந் கோனென்றும் பரனென்றும்பார், நாளென்றுநானறிந்த வனைஞ் சொல்லக்கே-ளுனென்றவிந்ததுதான் விருட்சமாகும், குளென்றசொல்லதுதான் சொல்வீரையா- துகளிலாச் சோதியே யாதியாகும், வேளென்றவேளான விவரந்தன்னை -விளம்புகிறேன் சல்லிவே ரொன்றுபேரே ... ... ... ... ... ... ... (௯௨)

பேரானபேரதுதா னண்டப்பேராம் - பேசுதற்குநாவெழுமோ பேசார்பேசார், சீரானசோறதுதான் மதனச்சோறு- செப்பரியசோதிமர வேர்தான்சோறு, ஆரானவாறதுதா னண்டவாறு- மாயிரத்தெட்டண்டமட்டு மளாவும்பாரு, நீரானசாறதுதா னண்டச்சாறு-நிகழ்த்துசல்லியமெனுமோர் கொல்லிவேரே ... (௯௩)

கொல்லிவேர்.

கொல்லும்வேர்வெல்லும்வே ரொன்றுபோரங்- கூறுமொரு சல்லியமா மரத்தின்வேரு, கல்லும்வேர்புல்லும்வேரண்டவேரு- கருவிருந்தவண்டவே ரிதற்குப்பேராம், சொல்லும்வேர்நில்லும் வேரொன்றுபோருஞ் சொற்பெரியகல்லுப்பெற்றிதற்குப்பேராம் அல்லும்வேர்வெல்லும்வேர் குருவின்வேரா - ண்டத்தில் மரமென்று மிதற்குப்பேரே ... ... ... ... ... ... (௯௪)

மரமென்றுலென்னமரஞ்சொல்வீரையா- மகத்தானவண்டத்தின்மரந்தானையா, வரமென்றுலென்னவரஞ் சொல்வீரையா- வழலையென்றவாலரசமரந்தான்பாராய், சரமென்றுலென்ன சரஞ்சொல்வீரையா - சாற்றரியசல்லிவேர்ச் சாரந்தானையா, அரமென்றுலென்னவரஞ்சொல்வீரையா-வகண்டமென்ற வகண்டத்தின் வரத்தின்பேரே ... ... ... ... ... ... ... ... (௯௫)

பேரானபெயர்களெல்லாம் வெளியதாகப்- பேசினேன்புலத்தியனைஞ்சாங்காண்டத்தில், பாரறியபதினெண்பேர் மறப்பையெல்லாம்-பகல்போலேவிளக்கிவிட்டேன் பண்பாய்ப்பாரு,சீராக வெவர்களிவ் வண்ணஞ்சொன்னார்- சீர்தூக்கிப்பார்க்கிலிலையாரே

வையு, ஆரானவனாகுறைக ளற்றுப்போக-வாதிதொட்டந்தமட்டு மறைந்திட்டேனே... ... ... ... ... ... ... (௧௬)

அறைந்திட்டேனிந்நூலை வெளிவிட்டோர்க-ளண்டவிடிவிழுந்துதலை தெறித்துப்போவார், குறைந்துமதிகுருமொழியைவெளிவிட்டக்கால் - கோடியிடியவர்தலையில் விழுமன்றேபார், சிறந்தபுகழ்ச்சதகோடி ரிஷிகள்சாபஞ்-செகற்குருவின் சாபமதுவந்துசாரும், மறிந்தோடச்சாபங்க ளனைத்துந்தீர்த்தேன்-மகத்தானவைந்நூற்றை யடக்கம்பண்ணே ... ... ... ... ... (௧௭)

பண்ணப்பாபராபரத்தின்கிருபையாலே - பாரித்தேனனைத்திருக்கும்பெயருஞ்சொன்னேன், கண்ணப்பர்கண்மணியேசாற்றுவொண்ணுக் - கருவெல்லாமுன்றனக்குக்கருத்தாச்சொன்னேன், விண்ணப்பாவின்னுக்குண்மணியேயென்றன்-வேதாந்தசித்தருக்குள் விளங்கும்வாழ்வே, நண்ணப்பாநாதாந்தப்பொருளைப்போற்று-நயமாகவென்குருவு முரைத்தார்காணே ... ... (௧௮)

காணவென்றுனெடுந்தூரமென்றேவாடிக்-கலங்காதேயென்மகனேகருவைக்கண்டு, மாணவென்றுனல்லவழி யிஃதென்றேகி-மகத்தானவண்டசராசரங்களெல்லாம்காணவேகண்டுதெளிந்திடுநீமாமுக்-கருணைபொழியென்குருவாங்குமரவேளும், யாணர்நிறையாதியந்தமிதுவேயென்று-மண்டசத்தசாகரமுமிதுவென்றுரோ.()

இதுவன்றோவண்டபகிரண்டமென்று-மிதமானவண்டம்பேரண்டமென்றும், பதியென்றபரமென்றே யைஞ்சாங்காண்டம்-பகருகின்றபேரண்டப் பதியாமென்றும், மதியொடுசேர் மவுனவண்டமிதுவேயென்று-மகத்தானவென்குருவுமுபதேசித்தார், சதுர்பெறு சத்குணநிதியேயறிந்துவாழ்த்தி-சாற்றுபரிபாடை முற்றுமுற்றிற்றன்றே ... ... ... ... ... ... ... ... (௨௰)

ஐந்தாங்காண்டம்-முற்றிற்று.

---

அகத்தியமுனிவர்-அருளிச்செய்த

# பரிபாஷைத்திரட்டு

முற்றிற்று.

---

ஆக காண்டம்-௫-விருத்தம்-௱.